பால பாகவதம்

இயற்றியவர்:
திருமதி P. மங்களா பாய்

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

பால பாகவதம்

இயற்றியவர் :

திருமதி P. மங்களா பாய்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது)

[23—5—50 கெஜட்டின் I-ம் பாகம் 33-ம் பக்கமும், II-ம் பாகம் 112-ம் பக்கமும் பார்க்க]

V. S. வெங்கடராமன் கம்பெனி


பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை 7 அணா

Reprinted : October 1950

Sri Mahabharatham Press, Kumbakonam—2,000 Copies

பொருளடக்கம்



கஜேந்திர மோட்சம் (பக்கம் 44)

பால பாகவதம்

நான்முகம்

பாகவத நூலில், பரம்பொருளாகிய பகவானிடத்தில் அன்பு செலுத்தி பக்திசெய்யும் விதமும், துருவன், பிரகலாதன், அம்பரீஷர் முதலிய பக்தர்களைப்பற்றிய நற்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினுடைய இனிய சரித்திரமும் சொல்லப்பட்டிருப்பதால், இதற்குப் பாகவதம் என்னும் பெயர் பொருத்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், தேவர் அசுரர்களைப்பற்றிய பல வரலாறுகளும் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

பாகவத புராணம் மிகவும் பெரியது. இராமாயணத்தில் ஏழு பெரும் காண்டங்கள் இருப்பதுபோலும், மகா பாரதத்தில் பதினெட்டுப் பெரும் பருவங்கள் இருப்பது போலும், பாகவதத்திலும் பன்னிரண்டு பெரும் பிரிவுகளிருக்கின்றன. ஒவ்வொரு பாகத்திற்கும் ஸ்கந்தம் என்று பெயர். ஒவ்வொரு ஸ்கந்தத்திலும் உட்பிரிவுகள் அவ்

லது அத்தியாயங்கள் உண்டு. பாகவதத்தில் எல்லாம் சேர்ந்து முந்நூற்று முப்பத்தைந்து அத்தியாயங்கள் இருக்கின்றன. இந் நூலில் முக்கியமான விஷயம் பகவத் பக்தியே யாகும். அதுவன்றிப் படைப்பின் உற்பத்தி, பூமியின் வர்ணனை, அரசர்களுடைய வமிச பரம்பரை, தருமம் முதலிய அநேக விஷயங்களும் கூறப்பட்டிருக்கிறபடியால், இந் நூல் சிறுவர்களுக்கு எளிதில் விளங்குவதில்லை. ஆகையால் சிறுவர்களுக்கு விளங்கும்படி பாகவதத்திலுள்ள சில கதைகளைப் பொறுக்கியெடுத்து, எளிய நடையில் சொல்லவேண்டுமென்பது எமது நோக்கம். அதனாற்றான் இப் புத்தகத்திற்குப் பால பாகவதம் என்ற பெயரிட்டிருக்கிறது.


1. நாரதர் கலகம் நன்மையில் முடியும்

நாரதரின் சொற்படி வியாசர் பாகவதத்தை இயற்றியதாக நீங்கள் அறிந்திருக்கலாம். நாரதருடைய பெயர் புராணங்களில் அடிக்கடி வந்துகொண்டிருப்பதனால் அவர் யார், என்னென்ன செய்தார் என்பது உங்களுக்குத் தெரியவேண்டுவது அவசியம். நாரதருடைய கதை மிகவும் விநோதமானது. இவருடைய செயல்கள் காரணமாக "நாரதர் கலகப் பிரியர்" என்கிற பழமொழி வழங்குகிறது.

யாராகிலும் ஒருவன், இருவருக்குள் சண்டை மூட்டிவைத்துத் தான் ஒன்றும் அறியாதவன்போல் எட்டியிருந்து வேடிக்கை பார்த்தால், அவனைக் 'கலகப் பிரிய நாரதன்' என்று சொல்வது வழக்கம். ஏனென்றால், அத்தகைய குணம் நாரதரிடத்தில் இயற்கையாக அமைந்துள்ளது என்று பண்டுதொட்டே மக்கள் அறிந்து வந்திருக்கின்றனர்.

நாரதர் பிரம்மதேவரின் மானச புத்திரர்; அதாவது கேவலம் மனத்தால் உற்பத்தியானவர். அவருக்கு அவரது தந்தை ஏதோ ஒரு வேலை செய்யும்படி கட்டளையிட்டிருந்தார். அவ்வேலையில் மனதைச் செலுத்தினால் இறைவன் பூஜைக்கு

இடையூறு வருமென்று கருதி, அவர் தம் தந்தையின் கட்டளைப்படி செய்யவில்லை.



நாரதர்

அதனுல் பிரமதேவருக்கு அவர்மீது கோபமுண்டாகி அவரைக் கந்தருவனுகச் செய்து விட்டார். அதனுல் அவருடைய மதிப்பு

சிறிது குறைவுற்றது. பிறகு அவர் சங்கீதங் கற்றுப் பகவானுடைய புகழ்ப் பாக்களைப் பாடிக்கொண்டு திரியலானார். சுவர்க்கம், பூமி, பாதாளம் ஆகிய மூவுலகிலும் அவர் சுற்றிவர முடிந்தது. அவரை ஒருவரும் தடை செய்வதில்லை. அவர் எங்கும் சுற்றிக் கொண்டிருந்ததனால் எங்கு என்ன நடந்த போதிலும் அவருக்குத் தெரிந்துவிடும். அவர் சில சமயங்களில் ஏதாவது பெருங் காரியத்தை நடத்திவைக்கவேண்டி, சொல் லத் தகாதவைகளைச் சொல்லி, வீணாகக் கலகம் விளைவித்துவிட்டு வேடிக்கை பார்ப்பதுண்டு. ஆனால், எப்பொழுதும் "நாரதர் கலகம் நன்மையில் முடியும்".

ஒரு சமயம் இந்த நாரத முனிவர் ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சுவர்க்கத்தினின்றும் பாரிஜாத மலர் ஒன்று கொண்டுவந்து கொடுத்தார். அதை அவர் தம் மனைவியருள் ஒருத்தியாகிய ருக்மிணிக்குக் கொடுத்து விட்டார். இச்செய்தி கிருஷ்ணனுடைய இரண்டாவது மனைவியாகிய சத்திய பாமைக்குத் தெரிந்ததும் அவள் மிகவும் கோபங்கொண்டாள். பிறகு அவளைச் சமாதானம் பண்ணும்பொருட்டு, ஸ்ரீ கிருஷ் ணன் இந்திரனை யுத்தத்தில் வென்று, அவ னது நந்தவனத்திலிருந்து பாரிஜாத விருட்

சத்தைப் பிடுங்கிக்கொண்டு வந்து சத்திய பாமையின் தோட்டத்தில் நடுவதற்காகப் பெருமுயற்சி செய்யவேண்டியதாயிற்று.

நாரதர் மற்றொரு சமயத்தில் இலட்சுமி, பார்வதி, சரசுவதி ஆவர்களிடம் சென்று, "நீங்கள் மூவரும் பதிவிரதைகள் என்பது உண்மைதான்; ஆனால் அத்திரி முனிவ ரின் பத்தினி அனசூயை போன்ற கற்பரசி மூவுலகிலும் கிடையாது" என்றார். இதைக் கேட்டு அவர்களுக்குப் பொறாமையுண்டாகி, அனசூயையைச் சோதிக்கும்பொருட்டு மூவரும் தமது பதிகளை அஃதாவது திரு மால், சங்கரன், பிரம்மதேவர் ஆகிய மும் மூர்த்திகளையும் அனுப்பினார்கள். அவ் விடத்தில் அவர்களுக்கு மிகுந்த அவமா னம் நேரிட்டது. நாரதர் செயலே இதற்குக் காரணமாயிருந்தது.

ஒரு நாள் சித்திரசேனனென்னும் கந்தருவன் ஆகாய மார்க்கமாய்ச் சென்று கொண்டிருக்கும்பொழுது எச்சிலை உமிழ்ந் தான். அத்தருணம் காலவ ரிஷி கங்கை யில் மூழ்கிவிட்டுச் சூரியனுக்கு அருக்கியம் கொடுக்கும்பொருட்டுத் தம் கையில் நீரை ஏந்திக்கொண்டிருந்தார். அதில் அவ்வுமிழ் நீர் விழுந்தது. அதைக் கண்டு முனிவர் மிகுந்த கோபமடைந்து ஸ்ரீ கிருஷ்ணனிடம் சென்று முறையிட்டார். ஸ்ரீகிருஷ்ணனுக் கும் கோபம் வந்தது. முனிவர் எய்திய

அவமானத்தையும், சித்திரசேனன் செய்த அபசாரத்தையும் எண்ணி ஸ்ரீகிருஷ்ணன் கந்தருவனைத் தாம் கொல்லாமலிருக்கப் போவதில்லையென்று ஆணை கூறினார். கிருஷ்ணனுடைய சபதத்தைக் கேட்டுச் சித்திரசேனன் அஞ்சினான். அப்பொழுது நாரதர் சுபத்திரையிடஞ் சென்று, அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுப்பதாக அவளை வாக்களிக்கும்படி செய்தார். தன்னுடைய வாக்கைக் காப்பாற்றும்பொருட்டு அவள் அர்ச்சுனனை அணுகிச் சித்திரசேனனை இரட்சிக்கவேண்டுமென்று மன்றாடினாள். அதனால் அர்ச்சுனனுடைய நிலைமை இருதலைக் கொள்ளி எறும்புபோலாயிற்று. ஆயினும் சுபத்திரை கொடுத்த வாக்கைக் காப்பாற்றும்பொருட்டு ஸ்ரீகிருஷ்ணனுடன் யுத்தத்திற்கு நிற்கவேண்டி நேர்ந்தது. பிறகு அவர்களுக்குள் சமாதானமுண்டாகி யுத்தம் ஓய்ந்தது. இங்கும் கலகம் செய்தவர் நாரதர்தான். கிருஷ்ணனைக்கொண்டு சிசுபாலனைக் கொல்லும்படி செய்ததற்குக் காரணமாயிருந்தவரும் அவரே. வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்த ஏழு குழந்தைகளையும் கொல்லவேண்டுமென்ற எண்ணம் கம்ஸனுக்கு முதலில் உதிக்கவில்லை. அவனுடைய பாவம் அளவுமீற வேண்டுமென்று கருதி நாரதர், அவ்வேழு குழந்தைகளையும் கொன்றுவிடும்படி

அவனுக்கு உபதேசித்தார். புராணங்களில் நாரதரைப்பற்றி இத்தகைய கதைகள் அநேகமிருக்கின்றன. ஆதலாற்றான் 'நாரதர் கலகப்பிரியர்' என்னும் பழமொழி நிலவு கின்றது.

ஆனால் நாரதர் வறிதே கலகம் மூட்டி விட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப் பவர் அல்லர். அவர் அநேக சந்தர்ப்பங் களில் பிறருக்கு உதவி புரிந்ததுமுண்டு. பல தீயோர்களைக் கொல்வித்து சாதுக்க ளுடைய துன்பம் துடைப்பதில் அவர் எப்பொழுதும் பாடுபட்டுக்கொண்டிருந் தார். அவர் பெரிய விஷ்ணு பக்தராகவு மிருந்தார். துருவனுக்கு மெய்ஞ்ஞானத்தை உபதேசித்து, அவன் நிலையான உயரிய பதவி அடையச் செய்ததும் இவர்தான். கிருஷ்ணனுடைய பேரனாகிய அநிருத்தனைப் பாணாசுரன் சிறைப்படுத்திவைத்த தகவ லைக் கிருஷ்ணனுக்குத் தெரிவித்து, அவ ரைக்கொண்டு பாணாசுரனை வென்று அநி ருத்தனை விடுவித்ததும் நாரதரே.

இசைக்கருவிகள் பலவற்றிலும் மிகவும் மென்மையும் இனிமையும் வாய்ந்த வீணை வாத்தியத்தை முதலில்பயின்றவர் நாரதரே யாவர். நமது நாட்டில் சங்கீத சாஸ்திரமும் அவராற்றான் முதலில் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

2, விளையாட்டே வினையானது

பரீக்ஷித்து ராஜன் ஒரு சமயம் வேட்டையாடி மிகவும் களைத்துப்போக, தாகத்தினால் அவனுடைய நா வரண்டு போயிற்று. தண்ணீரோ ஓரிடத்திலும் காணப்படவில்லை; ஒரு முனிவரின் ஆசிரமம் மாத்திரம் தென்பட்டது. அதைக் கண்டதும் மன்னன் அதனுட் சென்றான். அத்தருணத்தில் முனிவர் கண்களை மூடிக்கொண்டு இறைவன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அரசனது வரவை அவர் அறியாததால் வந்த விருந்தினரை ஆதரிக்க அவரால் இயலவில்லை. அரசன் இஃதெல்லாம் வெறும் பாசாங்கு என்று எண்ணி அவரைப் பரிகசிக்கும்பொருட்டு அருகில் கிடந்த ஒரு செத்த பாம்பை வில்லின் முனையால் தூக்கியெடுத்து முனிவரின் கழுத்தில் போட்டுவிட்டுப் போய்விட்டான்.

முனிவருக்குச் சிருங்கி என்றொரு புதல்வன் இருந்தனன். அவன் வீடு திரும்பியதும் அதனைக் கண்ணுற்று அடங்காச் சினங்கொண்டு, அக் கோபாவேசத்தில் 'என் தந்தையை இவ்விதமாக அவமானப் படுத்தினவன் இன்றைக்கு ஏழாவது நாள் பாம்பு கடித்துச் சாகக் கடவன்' என்று சபித்தான். சற்று நேரத்திற்குள் முனிவர்

கடவுள் சிந்தனையிலிருந்து மனத்தை அகற்றிக் கண்ணைத் திறந்து பார்க்க, நிகழ்ந்தன யாவும் அவருக்குத் தெற்றென விளங்கின.



பரீக்ஷித்தும் முனிவரும்

இவ்வாறு குறும்பு செய்யும்படி அரசனுக்கு புத்தி யுதித்ததற்காகவும்,

சிருங்கியைப்போன்ற அந்தண வாலிபன் கடுஞ் சீற்றங்கொண்டு முன் பின் யோசியாமல் அரசனுக்குச் சாபம் கொடுத்ததற்காகவும் முனிவருக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. ஆனால் இனிமேல் வருத்தப்படுவதில் பயன் யாது? நடப்பதென்னவோ தவறப்போவதில்லையென்று நிகழ்ந்த விவரங்களை அரசனுக்கு முனிவர் தெரிவித்தார். அரசன் சிருங்கியின் சாப பலன் தன்னை அணுகாமலிருக்கும் பொருட்டு, பாம்பு அருகில் வராதவண்ணம் வேண்டிய பாதுகாப்புடன் இருந்தனன். அவன் எத்துணை எச்சரிக்கையாயிருந்தும் பயன்படவில்லை. எவ்வாறெனில், அரசனைக் காணவந்த ஓர் அந்தணன் அவனுக்குக் கையுறையாக ஒரு பழத்தை அளித்தான். அதினின்று மெல்லிய புழு ஒன்று தோன்றி பாம்பாக மாறி அரசனைக் கடித்ததனால் ஏழாவது நாள் அவன் தன்னுயிரை இழந்தான். அரசன் முனிவரைப் பரிகாசம் செய்தான். முடிவில் விளையாட்டே வினையாயிற்று.

---

3. இரணியாக்ஷனும் இரணியகசிபுவும்

சனத்குமாரர் என்னும் முனிவர் ஒரு சமயம் திருமாலைத் தரிசிக்கும்பொருட்டு வைகுண்டத்திற்குப் போனார். அங்கு அரண்மனை வாயிலில் ஜயன், விஜயன் என்னும் இரண்டு துவாரபாலகர்கள் நின்று காவல் புரிந்தனர். அவர்கள் சனத்குமார முனிவர் பூண்டிருந்த யாசக கோலத்தைக் கண்டு அவரைத் தடை செய்ததல்லாமல் ஏளனமுஞ் செய்தனர். அதைக் கண்ணுற்ற முனிவர் வெகுண்டு, "இவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்று உடையை வைத்து மதிப்பது மானிட உலக வழக்கமாகும். தேவலோகத்தில் அங்ஙனம் இல்லை. ஆதலால் முந்தியதை அனுசரித்து எப்பொழுது என்னை அவமதித்தீர்களோ, அப்பொழுதே நீங்கள் மானிட உலகத்தில் பிறந்து உழலத்தக்கவராய்விட்டீர்கள். ஆகவே பூமியிற் பிறப்பீர்களாக!" என்று சபித்தனர். அதனைக் கேட்ட துவாரபாலகர்கள் மிகுந்த மனக்கலக்கமடைந்து, "மானிட உலகத்தில் நாங்கள் பிறந்தபோதிலும், திருமாலின் சரண கமலங்களை மறக்காமலிருக்கவேண்டும்." என்று முனிவரைப் பணிந்து வேண்டிக்கொண்டனர். இவ்வாறாகச் சாபத்தை அடைந்த ஜயன் விஜயன் என்ற துவாரபாலகர், பின்னர் பூவுலகில்

இரணியாக்ஷன், இரணியகசிபு என்னும் பெயருடன் பிறந்தனர். இவர்கள் திதி என்பவளிடம் தோன்றியதால் தைத்தியர்கள் என்றழைக்கப்பெற்றனர். இவ்விருவரும் மிகப் பராக்கிரமசாலிகளாயிருந்தனர். ஆனால் அவர்கள் பராக்கிரமம் மக்கட்குத் துன்பம் கொடுக்கும் வகையில் உபயோகப் பட்டுவந்தது.

இரணியாக்ஷனுக்குப் போர் புரிவதில் உற்சாகம் அதிகம். அவனுடைய மட்டற்ற வலுவைக் கண்டு தேவர்களுங்கூட அவனை எதிர்க்கத் துணிந்தாரில்லை. ஒருகால் அவன் வருணனை யுத்தத்திற்குக் கூப்பிட்டான். அதற்கு வருணன், 'நான்' இப்பொழுது முதுமைப் பருவமடைந்திருப்பதால் என் உடலில் உன்னுடன் போர்புரிவதற்கு வேண்டிய சக்தியில்லை. ஸ்ரீ விஷ்ணு ஒருவர்தான் உன்னுடன் போர்புரிய வல்லவர். ஆகையால் நீ அவரிடம் செல்வாயாக' என்ருன். தன்னை எதிர்க்கக்கூடிய வீரன் ஒருவன் இருக்கிருன் என்றறிய இரணியாக்ஷனுக்கு மகிழ்ச்சியுண்டாயிற்று. பிறகு நாரதர் மூலமாக ஸ்ரீ விஷ்ணு வராக வடிவங் கொண்டு பூமியைத் தமதுகொம்பினுல் தூக்கி எடுத்துக்கொண்டு பாதாளத்திலிருந்து மேலே வந்துகொண்டிருக்கிருர் என்று அவன் அறிந்தான். உடனே அவ்

விடம் சென்று திருமாலின் திறமையைக் கண்டு வியந்தான். ஆனல், அவன் அளவற்ற கர்வம் கொண்டிருந்தமையால், விஷ்ணுவை அலட்சியமாய்ப் பேசினன். அதனல் விஷ்ணு உள்ளூரக் கோபங் கொண்டபோதிலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. உண்மையான வீரர்களெல்லாம் இப்படித்தான் இருப்பார்கள். அமரர்கள் தம்மைத் தூற்றும் பிறருடைய இழிவான சொற்களைக் கேட்டு மிதமிஞ்சின கோபத்திற்கு இடங் கொடார். முதலில் சாந்தமாகப் பேசி அவர்களுடைய மனப்பான்மையை அறிவர். அதைத் தெரிந்துகொண்டும் ஒழுங்காக நடக்கா விட்டால், அவர்களுக்குத் தம் இயற்கை வடிவத்தையும், பாரக்கிரமத்தையும் காட்டுவார்கள்.

ஸ்ரீ விஷ்ணு சாந்தமாய் மறுமொழி அளித்ததைக் கண்டு இரணியாக்ஷன் செருக்கினல் தன் நிலைமை தெரியாமல் அவருடன் போர் தொடுத்தான். இறுதியில் இரணியாக்ஷன் தண்டித்துக் கொல்லப்பட்டான். இவ்வாறு அவனது செருக்கு வீழ்ச்சியுற்றது.

---

4. பிரகலாதன் சரித்திரம்

இரணியாக்ஷனைக் கொன்றதனால் இரணியகசிபு மிகவும் கோபங்கொண்டு தேவர்களைக் கண்டு பல்லையும் உதட்டையும் கடிக்கலானான். எப்பொழுது தன் சகோதரனுடைய கொலைக்குப் பழிவாங்குவதென்று அவன் காத்துக்கொண்டிருந்தான். விஷ்ணுவைக் கொன்று அவருடைய இரத்தததினால் தன் சகோதரனுக்குத் தருப்பணம் செய்வதாக வஞ்சினம் கூறினான். தேவர்கள் அனைவருக்கும் தலைவரான திருமாலைக் கொன்றுவிட்டால், தான் ஒருவர் பயமுமின்றி எதேச்சையாக வாழலாமென்று அவன் கருதினான். அவனுக்குத் தன சக்தியைப்பற்றிக் கர்வம் இருந்ததல்லாமல், தனக்குப் புகழ் கிடைக்கவேண்டுமென்ற எண்ணமும் இருந்ததனால், தன் கருத்து நிறைவேற அவன் பலவழிகளிலும் முயன்றுகொண்டிருந்தான். அவன் மலைகளிருக்கும் குகையிற் போய்க்கடுந்தவம் புரிய ஆரம்பித்தான். மகரிஷிகளும் கூட வெட்கிப்போகும்படியான அவனுடைய தவத்தைக் கண்டு பிரம்மதேவர் மனமகிழ்ந்து, 'உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்' என்று சொன்னார். அப்பொழுது அவன் 'நீவிர் உற்பத்தி செய்த எந்தப் பிராணியினாலும், பகலிலோ இரவிலோ.

அகத்திலோ புறத்திலோ, மண்ணிலோ விண்ணிலோ நான் மரணம் அடைதல் கூடாது' என்று ஒரு வரத்தைக் கேட்டான். பிரம்மதேவரும் அதைக் கொடுத்தார். பிரம்மதேவரிடமிருந்து இத்தகைய வரன் கிடைத்ததும், இனித் தனது சகோதரனின் மரணத்திற்குப் பழிவாங்க யாதொரு இடையூறுமில்லையென்று அவன் எண்ணினான். அவன் சகல அரசர்களையும் வென்று, இந்திர பதத்தையும்கூட அடைந்து, எல்லோரையும் துன்புறுத்தலானான். ஆதலால் எல்லா மக்களும் அவனுடைய மரணத்திற்காகப் பகவானைப் பிரார்த்திக்கலானார்கள்.

பகவானுடைய செயல் எவ்வளவு அற்புதமாயிருக்கிறது! எந்தச் சுரங்கத்தில் கரி உண்டாகிறதோ, அதே சுரங்கத்தில் நல்ல ஒளி பொருந்திய வயிரமும் உற்பத்தியாகிறது!

எந்தக் குலத்தில் இரணியகசிபுவைப் போன்ற துஷ்டர்கள் தோன்றினார்களோ அதே குலத்தில், அதே இரணியகசிபுவுக்குப் பிரகலாதன் என்னும் சற்குணனும், சாந்தனும், மக்கட்கு நன்மை புரியும் சிந்தையுடையவனுமாகிய ஒரு பக்தன் புதல்வனாகப் பிறந்தருளினான். குழந்தைப் பருவமுதற்கொண்டு பிரகலாதனுடைய சித்தம் பகவானுடைய திருவடியில் அமர்ந்திருந்தது. ஸ்ரீவிஷ்ணுவின் புகழைப் பாடுவதிலும்,

அவருக்குப் பூஜை செய்வதிலும் தவிர வேறொரு காரியத்திலும் அவன் மனம் செல்லவில்லை. அவனுடைய தந்தையும் ஆசிரியரும் எவ்வளவோ உபாயங்கள் செய்து பார்த்தும் அவனுடைய சித்தம் கலங்கவில்லை. அவனைத் திருப்ப முயன்ற எல்லோரும் சலித்துப்போயினர். உபதேசத்தினால் அவன் மனம் திரும்பவில்லை யென்றுணர்ந்து, அவனைப் பயமுறுத்தியும் பலவிதமான துன்பத்திற்குள்ளாக்கியும் தந்தை முயன்று பார்த்தான். தனது சகோதரனைக் கொன்ற சத்துருவைத் தன் மகன் பூஜிப்பது கண்டு இரணியகசிபுவின் கோபம் அளவுகடந்து நின்றது. அப்பொழுது அவன் 'இவனைக் கொன்றுவிடுங்கள்' என்று தைத்தியர்களுக்குக் கட்டளையிட்டான். பிரகலாதனைக் கொல்லும்பொருட்டு எவ்வளவு உபாயங்கள் உண்டோ, அவைகள் எல்லாவற்றையும் தைத்தியர்கள் செய்துபார்த்தும் அவைகளனைத்தும் வீணாயின. ஈசுவர சிந்தனையில் அவனுடைய மனம் ஆழ்ந்திருந்தது. பகவானுடைய கிருபையினால் அவனுக்கு ஒருவிதமான தீங்கும் விளையவில்லை. அம்புகளால் அடிப்பது, யானையின் காலால் இடறச் செய்வது, பாம்பினால் கடிக்கச் செய்வது, மலையுச்சியிலிருந்து கீழே தள்ளுவது முதலிய சகல

விதமான தண்டனைகளையும் செய்து பார்த்தனர். ஆனால் பிரகலாதனுக்கு எள்ளளவு கூடச் சேதம் உண்டாகவில்லை. இரணியகசிபு பிரகலாதனை மறுபடியும் பாடசாலைக்கு அனுப்பினான். அதன் பின்னும் அவன் மனம் திரும்பவில்லை. அதற்கு மாறாக அவன் பாடசாலையிலுள்ள தோழர்களுக்கும் ஈசுவர பஜனையின் ருசியைக் காட்டிக் கொடுத்துவிட்டான். உபாத்தியாயர் இச் செய்தியை இரணியகசிபுவுக்குத் தெரிவிக்க, அவன் அடங்கா மனவெரிச்சல்கொண்டு, 'நீ யாருடைய ஆதாரத்தினால் என் கட்டளையை மீறி நடக்கிறாய் ?' என்று கோபத்துடன் பிரகலாதனை வினவ, பிரகலாதன் ''சகல உலகங்களுக்கும் ஆதாரமாகிய முழுமுதற் கடவுளே எனக்கும் ஆதாரம்'' என்றான். "அக் கடவுள் எங்கே இருக்கிறான்? காட்டு, பார்ப்போம்'' என்று வெகுண்டு கூறியதன் மேல் பிரகலாதன், '' இறைவன் இல்லாத இடமே கிடையாது. அவர் எல்லாப் பொருள்களிலும் இருக்கிறார்'' என்றான். அதனைச் செவியுற்ற அரசன் சிங்காதனத்திலிருந்து குதித்தெழுந்து, 'இந்தத் தூணில் இருக்கிறானா?' என்று கேட்டான். பிரகலாதன் 'ஆம், இந்தத் தூணிலும் இருக்கிறார்; எந்தத் துரும்பிலும் இருக்கிறார்' என்று விடையளித்தான். உடனே இரணியகசிபு அந்தத் தூணைப் பலமாக உதைத்தான்.

அக்கணமே ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. சகல ஜனங்களும் பயந்து நடுங்கினர். இரணியகசிபுவும் திகைப்படைந்து எங்கிருந்து அப்பேரொலி உண்டாயிற்றென்று கவனிக்கலானுன். அதற்குள் தூணிலிருந்து நரசிங்க வடிவத்தோடு ஸ்ரீ விஷ்ணு வெளி வந்தனர். அவரைக் கண்டதும் இரணிய கசிபு, கதையை ஓங்கிக்கொண்டு அவர்மேல் பாய்ந்தான். அப்பொழுது அவ்விருவருக்கும் யுத்தம் நிகழ்ந்தது. அச்சமரில் நரசிங்க மூர்த்தி இரணியகசிபுவை நன்ருகப் புரட்டிப் பிறகு அவனைத் தனது தொடைகளின்மீது குறுக்காகப் படுக்கவைத்துக்கொண்டு, அந்திநேரத்தில் நகங்களால் அவனுடைய வயிற்றைக் கிழித்தார். பிரகலாதன் பகவானைப் புகழ்ந்து அவருடைய கோபத்தைத் தணியச்செய்து, தன் தந்தைக்கு நற்கதி கிடைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். பின்னர், பிரகலாதன் நாட்டில் முடி சூட்டிக்கொண்டு செங்கோல் புரிந்து வரலானுன்.

5. தக்கனும் வீரபத்திரனும்

ஒரு சமயம் பரமசிவனும், பிரம்மதேவர் முதலிய தேவர்களும், வசிஷ்டரைப் போன்ற முனிவர்களும் சபையில் உட்கார்ந்திருக்கும்பொழுது தக்கன் அவ்விடம் வந்தான். அவன் வந்ததும் எல்லோரும் எழுந்து அவனுக்கு நல்வரவு கூறினர். சங்கரரும் பிரம்மதேவரும் மாத்திரம் எழுந்திருக்கவில்லை. பிரம்மதேவர் தன்னைவிடப் பெரியவராதலால் அவர் எழுந்திருக்காதது தக்கனுக்கு அவமரியாதையாகத் தோன்றவில்லை. தக்கன் சங்கரருக்கு மாமனுராவான். அவனுடைய மகள் சதி என்பவள் சங்கரருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். மாமனுருக்கு மரியாதை செய்யும்பொருட்டு மருமகன் எழுந்திருப்பது மரபு அல்லவா? அவ்வாறு சங்கரர் செய்யவில்லையாதலால் தக்கன் கோபங்கொண்டு, நிறைந்த சபையில் சங்கரரை நிந்தித்துப் பேசலானுன். சங்கரர் மறுமொழி யொன்றுமே யளிக்கவில்லை. அதனுல் தக்கனுடைய கோபம் இன்னும் அதிகரித்தது. சகல தேவர்களுள்ளும் சங்கரர் அமங்கலமும் துஷ்டருமாதலால், தான் செய்யப்போகும் யாகத்திலுள்ள திரவியத்தில் அவருக்குப் பங்கு கிடைக்கக்கூடாதென்று தக்கன் சாபமிட்டான். அதற்கும் சங்கரர் ஒன்றும் பேசவில்லை. ஆனுல் தன் எஜமானனை அவ

மானப்படுத்தினதைக் கண்டு நந்திக்குக் கோபமுண்டாகி, அவன் தக்கனைச் சபித்தான்.

இது நடந்து பல நாட்கள் சென்ற பிறகு தக்கன் வேள்வி செய்ய ஆரம்பித்தான். அதற்குச் சகல தேவர்களையும் அழைத்திருந்தான். சங்கரரையும், அவர் பத்தினியாகிய (தக்கனுடைய மகளான) சதீயையும் மாத்திரம் வேண்டுமென்றே அழைக்கவில்லை. ஏற்கனவே தேவர்கள் சபையில் மாமனுருக்கும் மருமகனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்ட சங்கதி சதீக்குத் தெரியாது. ஆதலால் தன்னை அழைக்க மறந்திருப்பார்களென்று அவள் நினைத்தாள். தான் பிறந்த அகத்திலேயே யாகம் நடக்கப் போவதால், அழைப்பை எதிர்பாராமல் தான் போனுல் தன் தந்தை ஒன்றும் கோபித்துக்கொள்ளமாட்டாரென்று எண்ணி, யாக மகோற்சவத்திற்குப் போக விரும்பி, சங்கரரிடம் அனுமதி கோரினுள். அவர், 'இஷ்டமித்திரர்களுடைய வீட்டிற்கு, இத்தகைய சமயங்களில் அவர்கள் அழைக்காமலே போகலாமென்பது உண்மையாயினும், நீ தற்சமயம் போவாயாளுல் உனக்கு அவமானம் உண்டாகும். ஆகையினுல் நீ போகவும் வேண்டாம்; உன் தகப்பனுடைய முகத்தில் விழிக்கவும் வேண்டாம்' என்றனர். பிறந்தகத்தில்

நடைபெறும் யாகத்திற்குப் போகவேண்டுமென்று ஒரு பக்கத்தில் அவள் மனம் துடிக்க, மற்றொரு பக்கத்தில் சங்கரருடைய அனுமதி கிடைக்கவில்லையே யென்ற வருத்தம் அவளை வாட்டத் தொடங்கியது. தன்னைப் பயமுறுத்துவதற்காகவே சங்கரர் போலிக்காரணங்களைச் சொல்லுகிறாரென்று நினைத்துக் கணவன்மேற் கோபங்கொண்டு, அவரைக் கேட்காமலே அவருடைய கணங்களை அழைத்துக்கொண்டு தன் தந்தை வீட்டிற்குச் சென்றாள். சங்கரர் சொன்னபடியே, அவள் போனதும் அவளுக்கு முதலில் அவமானமுண்டாயிற்று. அவள் வரவால் ஒருவருக்குமே மகிழ்ச்சி உண்டாகவில்லை; ஒருவரும் அவளைப் பொருட்படுத்தவில்லை. மேலும், வேள்வியில் சங்கரருக்குச் சேரவேண்டிய பொருளையும் அவளிடம் கொடுக்கவில்லை. அதைக் கண்டு சதீ, தன் பிதாவைக் கண்டபடி பேசினதல்லாமல், 'உன்னைப்போன்ற கொடிய பிதாவால் கிடைத்த இந்தச் சரீரம் தான் எனக்கு எதற்கு' என்று சொல்லி அக்கினி குண்டத்தில் குதித்தனள். சங்கரருடைய பரிவாரங்களும் அட்டகாசம் செய்தனர். அப்பொழுது அவர்களுக்கும் தக்கனுடைய கட்சியினருக்கும் பெரும்போர் நடந்தது. இச் சங்கதி நாரதர் மூலமாய்ச் சங்கரருக்குத் தெரிய, அவர் கோபத்தினால்

தமது சடையை ஓங்கித் தரையில் அடித்ததும், அதிலிருந்து வீரபத்திரன் என்னும் ஒரு பலவான் தோன்றி, 'என்ன உத்தரவு' என்று கேட்டுக் கைகட்டி, வாய் பொத்தி அவர் முன் நின்ருன். தக்கனுடைய யாகத்தை அழித்து அவனைக்கொல்லும்படி சங்கரர் உத்தரவிட, வீரபத்திரன் அவ்வாறே செய்து, தக்கனுடைய தலையைத் துண்டு துண்டாக வெட்டித் தீயில் போட்டான். பின்னர், சகல தேவர்களும் சங்கரரிடம் வந்து, அவருடைய கோபம் தணிந்த பிறகு, 'குற்றவாளிக்குத் தக்க தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது தான் செய்த குற்றத்திற்காகத் தக்கனுக்குப் பச்சாதாபம் ஏற்பட்டு அவன் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிருன். ஆதலால் அவனுக்கு அருள்பாலித்தல் வேண்டும்'' என்றனர். சங்கரரும் அக மகிழ்ந்து அருளவே தக்கனுடைய முண்டத்தின்மேல் ஆட்டின் தலையை வைத்துத் தேவர் அவனை எழுப்பினர். அதன் பின் யாகம் முறைப்படி நடந்தது. அக்கினி குண்டத்தில் குதித்த சதீயானவள் பின்னர் இமவானுடைய புதல்வியாகப் பிறந்து, மறுபடியும் சங்கரரையே பதியாக அடைந்தனள். இரண்டாவது பிறப்பில் அவளுடைய பெயர் பார்வதி என்ருயிற்று.

---

6. துருவன் கதை

முற்காலத்தில் சூரிய வம்சத்தில் உத்தானபாதன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்குச் சுருசி, சுநீதி என்று இரண்டு அரசிகள் இருந்தனர். அவர்களுள் இளைய மனைவி அரசனுக்கு மிகவும் பிரியமானவள்; மூத்தவள் பிரியமில்லாதவள். இளையவளுக்கு உத்தமனென்றும், மூத்தவளுக்குத் துருவன் என்றும் இரண்டு குமாரர்கள் பிறந்தனர். ஆனால் அரசனுக்கு உத்தமன்பாலிருந்த அன்பு துருவன்பாலில்லை. ஒரு சமயம் உத்தமன் அன்புடன் அரசனுடைய மடியில் போய் உட்கார்ந்தான். அதுபோலத் தானும் உட்கார வேண்டுமென்று எண்ணி, துருவன் தந்தையின் மடியில் உட்கார முயன்றான். அதைக் கண்டு அவனுடைய மாற்றாந்தாயாகிய சுருசி என்பவள் அவனை அவமதித்து வீட்டிற்குத் துரத்திவிட்டாள். துருவன் அழுது கொண்டே வீட்டிற்குச் சென்று நடந்தவற்றையெல்லாம் தனது அன்னையிடம் சொல்ல, அவள் 'குழந்தாய்'! கடவுளுடைய கிருபையில்லாமல் ஐசுவரியம் கிடைப்பதில்லை. ஆகையால் மானிடர்கள் முதலில் நன்னடத்தையுள்ளவர்களாயிருக்கக் கற்றுகொள்ளவேண்டும்; பிறருக்கு நன்மை புரியவேண்டும்; அப்படியானால் கடவுள் கருணை புரிவார்' என்றாள். தாயின் உபதேசத்தினால

அவன் மனம் சமாதான மடையவில்லை. தன் மாற்றாந்தாய் தந்தையின் மடியில் தன்னை உட்கார விடவில்லையே யென்ற வருத்தம் அவன் மனத்தில் வேரூன்றி யிருந்தது. உலகத்தில் ஒருவராலும் அடைய இயலாத பெரும் பதவியைத் தன் முயற்சியினால் அடையவேண்டுமென்ற



மனவுறுதி அவனுக்கு உண்டாயிற்று. உடனே அவன் கானகத்திற்குச் செல்லப் புறப்பட்டான். போகும்போது வழியில் அவன் நாரத முனிவரைச் சந்தித்தான். அவனைக் கண்டு அம்முனிவருக்குக் கருணை

உண்டாகி, கடவுளைத் துதிக்கும் முறையை அவனுக்கு உபதேசித்தார். அவ்வாறே அவன் நிறைந்த பக்தியுடன் பகவானைத் துதிக்கத் தொடங்கினன். இடையில் அவனுக்கு எத்தகைய இடையூறுகள் நேர்ந்த போதிலும், அவன் சித்தத்தைக் கலங்க விடாமல் திடமாக இருந்தான். பகவானை அடையவேண்டுமென்ற ஒரு எண்ணத்தையே அவன் உறுதியாகக்கொண்டிருந்தான். ஆகையால் அவனுக்கு அதன் பலன் கிடைத்தது. பகவான் அவனுடைய மன உறுதியைக் கண்டு களிப்படைந்து, அவன் விரும்பியபடி அவனுக்கு மிகவும் மேன்மையும், நிலைத்ததுமான பதவியைக் கொடுத்தார். பகவானுடைய கிருபையைப் பெற்றுத் துருவன் மறுபடியும் தன் இல்லம் சென்றபோது, அவனுடைய தந்தைக்கு அளவிலா ஆனந்தமுண்டாகி, அவனை மிகுந்த அன்புடனும் மகோற்சவத்துடனும் எதிர்கொண்டழைத்தான். பின்னர், அவனுக்கு இராஜ்ஜியத்தைக் கொடுத்துவிட்டு, தான் தவம் புரியும்பொருட்டுக் கானகம் செல்லலானன். சுருசியானவள் தன்னை அவமதித்ததை அவன் சற்றும் மனதில் வைத்துக்கொள்ளவில்லை. அன்றியும், தன் சிற்றன்னையின் மகனை எச்சர்கள் இமாலயத்தின்மீது போரில் கொன்றுவிட்ட சங்கதியைக் கேட்டு, கோபத்தினல் கண்கள் சிவக்க,

அவர்களுடைய கர்வத்தை அடக்கும் பொருட்டுப் பெருஞ் சேனையுடன் புறப் பட்டுப் போய் அவர்களை நாசம் செய்து விட்டுத் திரும்பிவந்தான். அவன் தன் தந்தைக்குப் பிறகு பல ஆண்டுகள் வரை யில் நீதியாக அரசுபுரிந்து, குடிகளுக்கு நல்ல சுகம் உண்டாகுமாறு செய்து, பிறகு அரசாட்சியைத் தன் மகன் வசம் ஒப்பு வித்துவிட்டு, பகவானால் அளிக்கப்பட்ட நிலையான துருவ பதத்தை அடைந்தான்.

சிறுவர்களும் சிறுமிகளும் துருவனைப் போல் மனவுறுதியோடிருந்து, ஊக்கத்தை இழக்காமல் தமது காரியத்தைச்செய்யவும், எல்லோரிடத்திலும அன்பு பாராட்டவும் வேண்டும்.

---

7. வேனராஜன் வரலாறு

பண்டைக்காலத்தில் அங்கன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் மக்கட் பேறு இல்லாமையால் மிகவும் வருத்தப் பட்டுக்கொண்டிருந்தான். பல நோன்பு களை நோற்றுப் பலவிதமான தவங்களைப் புரிந்த பிறகு அவனுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அப்பொழுது குடிகளெல்லோ ரும் அளவற்ற ஆனந்தம் அடைந்தனர். குழந்தைக்கு வேனன் என்று பெயரிடப்

பட்டது. வேனன் பிறந்ததனல் ஜனங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுண்டான போதிலும் அது அதிகக் காலம் நிலைத்திருக்கவில்லை. ஏனென்றால் அவன் மிகவும் துஷ்டனுக வளர்ந்துவந்தான். சாதுவான பிராணிகளுக்குத் தொந்தரவு கொடுப்பது, குடியானவர்களை அடிப்பது முதலிய பலவிதமான தீமைகளைச் செய்துவந்தான். ஜனங்கள் அவனைக் கண்டு பயந்து நடுங்கிக்கொண்டிருந்தார்கள். ஏனென்றால் அரசிளங்குமாரன் எந்தச் சமயத்தில், என்ன தீங்கு செய்வானென்று சொல்ல முடியாது. தன்னுடன் விளையாடும் தோழர்களைக்கூட அவன் மிதமிஞ்சித் துன்புறுத்தி வந்தான்.

தன் அருமைப் புதல்வனுடைய இத்தீய செய்கைகளைக் கண்டு அங்கராஜனுக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. புத்திரனை நல்ல மார்க்கத்தில் திருப்பவேண்டுமென்று அவன் எவ்வளவோ உபாயங்கள் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை. முடிவில், அவனல் அத்தீய செயல்களைச் சகிக்க முடியாமல், 'இத்தகைய புதல்வன் இருப்பதைவிட இல்லாமல் இருப்பது நன்று. இத்தகைய மக்கள் தாய் தந்தையர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் பொருட்டும், அவருடைய பெயரைக் கெடுக்கும்பொருட்டுமே பிறக்கின்றனரோ

என்னவோ' என்று மிகவும் வெறுப் படைந்தவனுய் அங்கராஜன், ஒரு நாள் இரவில் ஒருவரும் அறியாவண்ணம் தூர தேசம் புறப்பட்டுப் போய்விட்டான். திரும்பி வரவேயில்லை. வேலைக்காரர்கள் எவ்வளவோ தேடியும் அவனைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

தகப்பனுக்குப் பிறகு மகன், சிங்காதனத்திற்கு வாரிசு ஆனதால் வேனராஜனுக்கு முறைப்படி அரசுரிமை கிடைத்தது. பிரதானர்கள் எல்லோரும் சேர்ந்து அவனுக்கு முடிசூட்டினர். ஆனல் அரசகுமாரன் பட்டத்திற்கு வந்ததும் அவன் எத்தகைய கொடுமை செய்வானே என்று ஜனங்களெல்லோரும் பயந்து நடுங்கலாயினர். அவர்களுடைய பயம் வீணன்று. முடிசூட்டப் பெற்றதும் வேனராஜன் குடிகளைக் குரூரமாகத் துன்புறுத்தத் தலைப்பட்டு. விரைவில் 'பகவானே காப்பாற்றும்' என்று அவர்கள் முறையிடும்படி செய்துவிட்டான். அரசனுனவன் பகவானுடைய அமிசமாயிருக்க, அவனை வணங்குவதைவிட்டுப் பகவானை ஏன் வணங்கவேண்டுமென்று அவன் சொல்லலானுன். ஒழுங்கும், நீதியும், பாதுகாப்பும் குறைந்தன. அரசனுடைய தருமத்தை மன்னன் காப்பதில்லை; குடிகளின் தருமத்தைக் குடிகள்

காப்பதில்லை. இந்நிலைமை ஏற்பட்ட பொழுது புத்திமான்கள் எல்லோருமாக யோசித்து, தானும் அதருமமாக நடந்து, குடிகளையும் அதருமமாக நடக்கும்படி செய்யும் அரசனைக் கொல்வதனால் பாப மில்லையென்றும், அது சாஸ்திரத்திற்கு விரோதமல்லவென்றும் நிச்சயித்து, இறுதியாக வேறு வழியின்றி அரசனைக் கொன்றுவிட்டு, அவன் புத்திரனைச் சிங்கா தனத்தில் அமர்த்தினர். இவ்வாறு தீயோனாகிய அரசனுக்குக் குடிகளால் தக்க தண்டனை கொடுக்கப்பட்டது. ஆதலால், அரசன் எவ்வளவுக் கெவ்வளவு குடிகளுடைய நன்மையில் கவனத்தைச் செலுத்தித் தருமத்துடன் நடக்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு குடிகளும் அவனை விஷ்ணுவின் அமிசமென்றெண்ணி மரியாதையாய் நடத்துவர். அஃதல்லாமல் அரசன் அதருமமாய் நடந்து குடிகளுடைய மனதிற்குத் துன்பத்தைக் கொடுக்கும் போது, குடிகளும் அவனுடைய கொழுப்பை அடக்கப் பின்வாங்குவதில்லை.

8. பிருதுராஜனின் கதை

வேனராஜனுடைய காலத்தில் அவன் கொடுங்கோலினுல் ஒருவருக்கும் ஒன்றுஞ் செய்யத் தோன்ருமல், நிலங் காணிகள் கவனிப்பாரின்றிக் கிடந்தன. அதனுல் நிலம் உழுவது, அறுவடை செய்வது முதலிய வேலைகள் சரிவர நடைபெறவில்லை. தானியங்கள் விளையாததினுல் மக்கள் உண்பதற்கில்லாமல் பசிப்பிணியால் மாண்டனர். வேனராஜனுக்குப் பிறகு சிங்காதனத்திற்கு வந்த பிருதுராஜனுடைய காலத்திலும் இந்நிலைமைதா னிருந்தது. மக்கள் அன்ன ஆகாரமில்லாமல் மரித்துக்கொண்டிருந்த போதிலும் பிருதிவி (பூமி) தானியம் கொடுக்க வில்லை. அதைக் கண்டு பிருதுராஜன் பூமியின்மீது தன் அம்பைத் தொடுப்பதற்காக வில்லை எடுத்துக் குறிபார்க்கும் தருணத்தில், பிருதிவி (பூமாதேவி) யானவள் பசுவின் உருவமாக வந்து அரசனைச் சரண் புகுந்து, "அரசனே! நான் ஒரு குற்றமுமற்ற பெண்ணுயிருக்கிறேன். அரசர்கள் என்னைச் சரிவரக் கவனிப்பதில்லை; நல்ல வண்ணம் பரிபாலிப்பதுமில்லை. அதனுல் மரங்கள் வாடிப்போயின; தானியங்கள் தட்டிப் போயின அதற்குக் காரணம் என்னிடத்தில் என்ன இருக்கிறது? நீ இப்பொழுது சுரப்பு உண்டாகும்படியான ஒரு கன்றைக்

கொண்டுவந்து என்னிடத்தில் விட்டு, 'பாத்திரத்தையும், கறக்கிறவனையும் தயாராக வை' என்றதும், அரசன் அவ்வாறு செய்ய, அப்பசு ஏராளமான பாலைக் கொடுத்தது. ஜனங்களும் முன்போல் வறுமை நீங்கப்பெற்றனர்.

சிறுவர்களே, இது ஒரு விநோதமான சம்பவமென்று சொல்லவேண்டியதில்லை. பூமாதேவி சொல்வதன் அர்த்தம் என்னவென்றால், அரசன் குடிகளை நல்லபடி பரிபாலனம் செய்தால் குடிகளும் உழுவது முதலிய வேலைகளை நன்றாகச் செய்வார்கள், அப்பொழுது நிலம் செழிப்படைந்து, வேண்டிய தானியங்கள் விளையும். ஒருவன் முயற்சி எடுத்து நுட்பபுத்தியுடன் சாகுபடி செய்வதுடன் திருடர், கொள்ளைக்காரர் முதலியவர்கள் பிடுங்கிக்கொண்டு போகாமல் அரசனால் காப்பாற்றப்பட்டு வந்தால், அவனுக்கு உண்ண உணவும், இருக்கக் கூரையும், ஏனைய நலங்களும் கிடைக்குமென்பது பிருதிவியின் வார்த்தைகளின் உட்கருத்தாகும்.

---

9. பிருதுராஜனின் யாகம்

நூறு அசுமேத யாகங்கள் செய்பவர்களுக்கு இந்திர பதம் கிடைக்குமென்பது நம் முன்னோர்களுடைய கொள்கை. அக்கொள்கையின்படி பிருதுராஜன் நூறு அசுவமேத யாகங்கள் செய்ய எண்ணங் கொண்டான். அசுவமேத யாகத்தில், குதிரையொன்றை வெளியில் விடுவார்கள். அதை யார் தடுக்கிறார்களோ அவர்களை வென்றாலன்றி யாகம் நிறைவேறுவதில்லை. பிருதுராஜனும் அவ்வாறு ஒரு அசுவத்தை விட்டு முறைப்படி தொண்ணூற்றொன்பது அசுவமேத யாகங்கள் செய்து முடித்தான். நூறாவது யாகம் நடக்கும் தருவாயில் வேள்விக் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த குதிரையை, பிருதுராஜன் கண்ணை மூடிக்கொண்டு விஷ்ணுவை நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது இந்திரன் முனிவர் கோலம் பூண்டுவந்து அவிழ்த்துக்கொண்டு போனான். பிருதுவின் புத்திரன் அவனைப் பின் தொடர்ந்து இந்திரனிடமிருந்து அக்குதிரையை விடுவித்துக்கொண்டுவந்தான். மறுபடியும் அரசன் அதை வேள்விக் கம்பத்தில் கட்டினான். மறுபடியும் இந்திரன் அதைத் தந்திரமாய் அவிழ்த்துச் சென்றான். பிருதுவின் குமாரன் முன்போலவே

மீண்டும் அதை விடுவித்துக்கொண்டு வந்தான். பல தடவைகளில் இவ்வாறு நடந்தது. முடிவில் யாகம் செய்யும் முனிவர்களே வெறுப்படைந்து, இந்திரனையே ஹோமம் செய்துவிடச் சித்தமானார்கள். அப்பொழுது பிரம்மதேவன் அவ்விடம் வந்து பிருதுராஜனை நோக்கி, 'அரசனே! உன்னுடைய நூறாவது வேள்வி இன்னும் முடிவு பெறாவிடினும், உனது பெயரும் புகழும் இந்திரனுடையவற்றைக் காட்டிலும் மேன்மை வாய்ந்தனவாயிருக்கின்றன. இனி நீ யாகம் செய்யும் சிரமத்தை எடுத்துக்கொள்ளாமல் பக்தியினால் பகவானை வசப்படுத்திக்கொள். நீ தூய உள்ளத்தோடு உன் தருமத்தையும், குடிகளையும் பாலனம் செய்வாயாகில், உனக்கு உண்மையான புண்ணியம் கிடைக்கும். ஏனென்றால், தன் கடமையை நிறைவேற்றுவதிற்றான் உண்மையான புண்ணியம் இருக்கிறது' என்றார்.

அரசன் அவ்வாறு செய்துவரவே, எல்லா தேவர்களும் அவன்முன் தோன்றினார்கள். பின்னர் அவன் தன் குமாரனுக்கு முடிசூட்டிவிட்டுத் தான் கந்தமூலங்களைத் தின்று, கடவுள் பூசையில் காலத்தைப் போக்கி, உண்மை ஞானத்தை அடைந்து, அதனால் பெரும் புகழ் பெற்றான்.

---

10. ஜடபரதன் சரித்திரம்

முற்காலத்தில் பரதன் என்னும் பெயருடைய ஒரு பெரிய அரசனிருந்தான். அவன் நீண்டகாலம் வரையில் நாட்டை ஆண்டு, பின்னர் மகன் பெரியவனானவுடன் அதை அவன்பால் ஒப்புவித்து, தான் கண்டகீ என்னும் நதியின் ஓரத்தில் ஓர் ஆசிரமத்தில் வசித்துக்கொண்டு, கடவுள் பக்தி செய்துகொண்டிருந்தான். அவனுடைய உள்ளம் மிகவும் அன்பு நிறைந்திருந்தது. இறைவன் புகழ்ப்பாக்களைப் பாடும்போது அவன் கண்களினின்றும் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகும். ஒரு தடவை இவ்வரசன் கண்டகீ யாற்றிற்கு முழுகப்போயிருந்தபோது அவ்விடத்தில் தாகத்தினால் வருந்தும் ஒரு பெண் மான் தண்ணீர் அருந்துவதற்காக வந்தது. தண்ணீர் அருந்திக்கொண்டிருக்கும் பொழுது அது ஒரு பயங்கரமான சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டுப பயந்து, தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுத் துள்ளியோடத் தலைப்பட்டது. அச்சமயம் அது சினையாயிருந்தது. அத்துடன் ஓடுவதனால் சிரமமடைந்தபடியால், அந்த அவசரத்தில் அதன் கரு தண்ணீரில் விழுந்துவிட்டது. மான் களைத்துப்போய் ஒரு பள்ளத்தில் விழுந்து உயிர் துறந்தது.

தண்ணீரில் விழுந்த அதன் கன்று நதியின் பிரவாகத்தோடு போய்க்கொண்டிருப்பதைப் பரதன் பார்த்தான். பார்த்ததும் அதன்மேல் அவனுக்கு இரக்கமுண்டாகி, அதை எடுத்துக்கொண்டு தனது ஆசிரமத்திற்குச் சென்றான். அவன் தினமும் அதற்கு ஆகாரம் முதலியன கொடுத்து, மிகவும் அருமையாய் வளர்த்துவந்தான். சிறிது காலஞ் சென்றதும், பரதனுக்கு அம்மான் இல்லாமலும், அம்மானுக்குப் பரதனில்லாமலும் காலங் கழிக்கமுடியாமற் போயிற்று. முழுகும்போதும், கடவுளைத் தொழும்போதுங்கூட அவனுடைய கவனமெல்லாம் அம்மானின் மீது செல்லலாயிற்று. அதை ஒரு விநாடிகூடக் காணாவிடில் பரதனுக்குக் கவலையாகவிருக்கும். ஒரு நாள் அது வழிதவறி எங்கேயோ போய்விட்டது. அப்பொழுது அவன் பயித்தியம் பிடித்தவனைப்போலாகி அதன் பெயரைச் சொல்லி அழைத்துக்கொண்டும், துக்கத்துடன் உரக்கக் கூக்குரலிட்டு அழுதுகொண்டும் திரியலானான். கடவுள் பக்தியை முற்றிலும் மறந்தான். நாள் செல்லச் செல்ல அவனுக்கு மரணகாலமும் கிட்டியது. அவனுடைய இறுதிக்காலத்திலும் அவன் எண்ணம் அம்மானைப்பற்றியதாகவேயிருந்தது. அதனால் அவன் மறுபிறவியில் மானாய்ப் பிறந்தான். ஆனால் முற்பிறவியில்

செய்த புண்ணிய பலத்தினுல், அக்காலத்தில் நடந்ததனைத்தும் அவனுக்கு ஞாபகத்தில் இருந்தது. அம் மான்பிறவி கழிந்ததும் அவன் பிரம்மபுத்திரனுகப் பிறந்தான். கடந்த பிறவியில் மான் குட்டியின்மேல் அன்பு பாராட்டியதால் மறு பிறவி கிடைத்தது ஆகையால் இப்பிறவியில் ஒருவர் மேலும் அன்பென்பதே பாராட்டப்போவதில்லையென்று நிச்சயப்படுத்திக்கொண்டு பயித்தியக்காரனைப்போல் நடக்கலானுன். பெரியவனுகியும் அவன் எழுதப் படிக்க ஒன்றும் கற்கவில்லை. சரீரத்தைப்பற்றியும் கவலை எடுத்துக்கொள்ளவில்லை. கூலிவேலை செய்து நொய், தவிடு ஏதாவது கிடைத்தால் அதைத் தின்றுவிட்டுக் கவலையற்றிருந்தான். பார்ப்பதற்கு மந்தனைப் போலவும், ஜடனைப்போலவும் தோன்றினமையால் அவனுக்கு ஜடபரதன் என்ற பெயர் ஏற்பட்டது.

ஒரு சமயம் ஒரு அரசன் தனக்கு மக்கட்பேறு உண்டாகவேண்டுமென்றும், அம்பிகைக்கு மானிடபலி கொடுப்பதாகவும் வேண்டிக்கொண்டான். அதன்படி பலி கொடுக்கும்பொருட்டு ஒரு மனிதனைப் பிடித்துக்கொண்டு வர, அவன் எப்படியோ தப்பித்து ஓடிப்போய்விட்டான். அப்பொழுது அரசனுடைய சேவகன் வேறொரு மனிதனைத் தேடும்பொருட்டுப் புறப்பட்

டான். அத்தருணம் ஜடபரதன் ஒரு வயலில் காவல் காத்துக்கொண்டிருந்தான். பார்ப்பதற்குத் தடித்தவனுயும், பலசாலியாயுமிருந்ததனுல், பலி கொடுப்பதற்குத் தகுதியானவனென்று கண்டு அச்சேவகன், அவனைப் பிடித்துக்கொண்டு அம்பிகையின் கோயிலுக்குச் சென்ருன். அவ்விடத்தில் அரசன் அவனுடைய தலையை வெட்டி அம்பிகைக்கு அர்ப்பணம் செய்வதாகத் தீர்மானித்திருந்தான். ஆனல் அம்பிகை அவனைக் காப்பாற்றி, அவனைப் பிடித்துக் கொண்டு வந்தவனைத் தண்டித்தனள்.

பிறிதொரு சமயத்தில் அரசனுடைய பல்லக்கைத் தூக்கிக்கொண்டு போகும் பொருட்டுச் சில ஆட்களைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தனர். அவர்களுள் ஜடபரதனும் அகப்பட்டான். பரதனுக்குப் பல்லக்கைச் சுமக்கும் வழக்கமில்லாததனுல், அவனுடைய நடை மற்றவர்களுடைய நடைக்கு இசையவில்லை. அதனல் பல்லக்கிற்கு அதிர்ச்சியுண்டாயிற்று. ஆதலால் அரசன் பல்லக்குத் தூக்கிகளின்மேல் கோபங்கொண்டான். அப்பொழுது அவர்கள், "எங்கள் பேரில் குற்றமென்ன இருக்கிறது? நாங்கள் பல்லக்கைச் சரியாகத்தான் கொண்டுபோகின்ருேம். இந்தப் புதிய மனிதன்தான் சரியாக நடப்பதில்லை" என்ருர்கள். அதுகேட்டு அரசன் கோபங்கொண்டு

ஜடபரதனை வைதான். அதற்கு அவன் கோபித்துக்கொள்ளாமல், சாந்தமாய், பெரிய தத்துவஞானி பேசுவதுபோல் பேசி, மறுபடியும் எதிர்த்துப்பேச இடங்கொடுக்காமல் அரசனைத் தடுத்தான். அப்பொழுது அரசன் அவனுடைய உண்மையான யோக்கியதையை அறிந்து, அவனிடத்தினின்றும் உபதேசத்தைப் பெற்றான்.

---

11. அஜாமிளன் கதை

கன்னிய குப்ஜ (தற்காலம் கனோஜ் தேசத்திற்கருகிலிருக்கும் பிரதேசம்) தேசத்தில் அஜாமிளனென்னும் ஒரு அந்தணன் இருந்தான். அவன் மிகவும் கெட்ட நடத்தை யுடையவன். திருட்டு, புரட்டு, பொய் பேசுதல் முதலிய இழிவான செயல்களால் எப்படியாவது தன் காரியத்தைச் சாதிப்பானே யன்றிப் பிறருடைய வருத்தத்தைக் கவனிப்பதில்லை. அவனுக்கு ஒரு தாசியினிடம் பத்து புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களுள் கடைசி மகனுக்கு நாராயணன் என்று பெயரிடப்பட்டிருந்தது. அவன்மேல் அஜாமிளனுக்கு அன்பு,

அதிகம். சற்று நேரம் நாராயணனைப் பாராமலிருக்க அவன் மனம் தாளாது. நாராயணனிடம் அவன் தன் உயிரையே வைத்திருந்தான்.

அஜாமிளன் முதுமைப் பருவமடைந்துங்கூட அவன் மனம் தெய்வபக்தி முதலியவைகளை நாடவில்லை. சதா காலமும் நாராயணன் அவன் அருகில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனை ஓயாமல் கூப்பிடுவான். இவ்வாருகப் பல நாட்கள் செல்ல, அஜாமிளனுக்கு மரண காலம் நெருங்கிற்று. அப்பொழுது அவனுக்குத் தன் கதி என்னவாகுமென்கிற கவலையுண்டாகி உயிர் துடிக்கலாயிற்று. ஆனபோதிலும் அவன், 'நாராயணு, நாராயணு' என்று தன் மகனைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான். மகனைக் கூப்பிடும் நிமித்தத்தினுல் மரண சமயத்தில், அவன் பகவானுடைய நாமத்தை வாயால் பன்முறை சொல்ல நேர்ந்தது. அதனுல் பகவான் அவனுக்கு அருள்புரிந்தார். அவனை வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லும்பொருட்டுத் தமது தூதர்களை அனுப்பினுர். அப்பொழுது அவனை

எமலோகத்திற்கு அழைத்துச் செல்லும் பொருட்டு எமனுடைய தூதர்களும் வந்தனர். இவர்களும் விஷ்ணுவினுடைய தூதர்களும் கூடிப் பேசினார்கள். அதை அஜாமிளன் கேட்க, அவனுக்கு மிகுந்த பச்சாத்தாபமுண்டாயிற்று. அந்நிலைமையில் பகவானுடைய நாமத்தை உச்சரித்து வணங்கினமையால், தன்னுடைய பாவம் நீங்கப்பெற்று விஷ்ணு தூதர்கள் கொண்டு வந்திருந்த விமானத்தில் உட்கார்ந்து அவன் வைகுண்டத்திற்குச் சென்றான். நாம் அறியாமல் நம் காலைத் தீயின்மீது வைத்துவிட்டபோதிலும், அதனால் நமக்குச் சூடுதட்டாமற் போவதில்லை. அதுபோல பகவானுடைய நாமத்தை அறியாமல் உச்சரிக்க நேர்ந்தபோதிலும், அதனால் பயன் உண்டாகாமற் போவதில்லை.

---

12. சற்குருவை அடைந்தாலன்றி நற்கதியில்லை

தேவ குருவான பிரகஸ்பதி ஒரு சமயம் தேவர்களுடைய சபைக்குச் சென்றனர். அச்சமயத்தில் செல்வச் செருக்கினால் இந்திரன் அவருக்குரிய மரியாதையைச் செய்யவில்லை. அதைக் கண்டு பிரகஸ்பதி

கோபங்கொண்டு பேசாமற் போய்விட்டார். பிறகு இந்திரனுக்கு அதைபற்றிப் பச்சாத் தாபம் உண்டாகி, "நான் பெரும் பிழை செய்துவிட்டேன். அதற்காக நான் குரு வின் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்ருல் யாருக்குமே குருவைத் தவிர வேறு கதி கிடையாது; மேலும், குருவுக்கு அவமானம் செய்கின்ற வர்களுக்கு ஒருநாளும் நன்மை உண்டா காது' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு பிரகஸ்பதியினிடம் சென்ருன். ஆனல் இந்திரனுக்குத் தரிசனம் கொடுக்கக் குருவுக்கு மனமில்லை; குருவை அவமானப் படுத்தியதற்காகத் தகுந்த தண்டனை விதித்தாலன்றி இந்திரனுடைய மதம் அடங்காதென்று பிரகஸ்பதிக்குத் தோன்றி யது. அதனல் அவர் வேண்டுமென்றே இந்திரனுக்குத் தரிசனம் கொடுக்காமலிருந் தார். இந்திரன் எவ்வளவு தேடியும் குருவைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இச் சங்கதி அசுரர்களுக்குத் தெரிந்த தும் அவர்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர். ஏனென்ருல், இந்திரன் முதலிய தேவர் களுக்கு இன்னல்கள் ஏற்பட்ட தருணங்

களில் தக்க யோசனை சொல்லி அவர்களைப் பாதுகாக்கும் குருவானவர் போய்விட்ட படியால் தேவர்களுடைய சக்தி மிகவும் குறைந்துவிட்டது. அதனால் அவர்கள் தேவர்களுடன் யுத்தம் புரிந்து அவர்களை வெல்ல அதுவே தக்க சமயமென்று கருதி, போர்புரியத் தலைப்பட்டார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் தைரியம் சொல்லக் குருவு மில்லாததனால் தேவர்கள் பயந்தனர்; யுத்தத்திலும் தோல்வியடைந்தார்கள். அப்பொழுது என்ன செய்வதென்று தெரியாமல் சகல தேவர்களும் பிரம்மதேவரிடம் சென்று முறையிட, அவர் அவர்களை நோக்கி, "ஐசுவரிய மதத்தினால் உங்களுடைய குருவை அவமதித்த பயனை இப்பொழுது நீங்கள் அநுபவிக்கிறீர்கள். பிரகஸ்பதியையோ இப்பொழுது கண்டு பிடிக்க முடியவில்லை. ஆதலால் தற்காலம் துஷ்டனுடைய புத்திரனான விசுவரூபனைக் குருவாகக்கொண்டு, அவனுடைய கட்டளைப் பிரகாரம் நடந்துகொள்ளுங்கள். அப்படியானால் உங்களுக்கு நன்மையுண்டா டாகும்" என்றனர். அவ்வாறே அவர்கள் செய்து வெற்றியடைந்து துன்பம் நீங்கப்

பெற்றனர். பெற்றபோதிலும், குருவை அவமானம் செய்ததற்காகத் தனக்கேற் பட்ட துன்பங்களை இந்திரன் ஒருபொழுதும் மறக்கவில்லை. அவன் மறுபடியும் சென்று பிரகஸ்பதியின் காலைப் பிடித்து மன்னிப்புக் கேட்க, குருவுக்கு அவன்மேல் கருணை யுண்டாகி அவர் அவனைப் பொறுத்தரு ளினர்.

---

13. கஜேந்திர மோட்சம்

திரிகூடம் என்னும் பருவதத்தின்மேல் வருணனுக்கு இருதுமத மென்னும் பெயரை யுடைய ஒரு அழகிய நந்தவனமிருந்தது. இந் நந்தவனத்திலுள்ள விருட்சங்கள், கனி களாலும் மலர்களாலும் நிறைந்திருந்தன. குளங்கள் தாமரை மலர்களால் கண்கவர் வனப்பு வாய்ந்திருந்தன. பல நிறங்களை யுடைய அழகிய பறவைகள் காலையிலும் மாலையிலும் கூவுதல் கேட்போர்களுடைய செவிக்கு மிகவும் இனிமையாயிருந்தது. இத்தகைய எழில்வாய்ந்த அந்த நந்த வனத்தினருகிலுள்ள அரணியத்தில் கஜேந்திரன், அஃதாவது யானைகளில் மேன்மை வாய்ந்தவன், வசித்துவந்தான்.

அவன் சிற்சில சமயங்களில் பெண் யானையையும் குட்டிகளையும் அழைத்துக் கொண்டு இந்த நந்தவனத்தில் உலாவு தற்கும், குளத்தில் குளிப்பதற்கும் வருவ துண்டு. ஆனைக்கு நீரில் முழுகுவதென்றால் பரமானந்தம் அல்லவா? ஒரு நாள் கஜேந்திரன் வெயிலில் சுற்றித்திரிந்து களைப்புற்றான். ஆதலால் சற்று அமைதி அடையும்பொருட்டுக் குளத்தில் இறங்கி னான். நீரில் பெண் யானையுடன் நெடுநேரம் விளையாடித் தன் தும்பிக்கையில் நீரைக் கொண்டு நாற்புறமும் தெளித்த பிறகு அவன் மனதில் பேருவகை யுண்டாயிற்று. ஆனந்தத்தில் ஆழ்ந்திருக்கும்பொழுது, திடீரென்று ஒரு முதலை அவன் காலைப் பிடித்துக்கொண்டது.

அவன் முதலையின் வாயினின்றும் தன் காலை விடுவித்துக்கொள்ளும்பொருட்டு எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. முதலை அவனை ஆழத்தில் இழுக்க ஆரம் பித்தது. ஆதலால் கஜேந்திரனுடைய உயிர் துடிக்கலாயிற்று. ஆனால் அவன் என்ன செய்வான்? ஒன்றும் தோன்ற வில்லை. முதலை தன்னை விடப்போவதில்லை

யென்று தோன்றியதும், அவன் கண்ணீர் விட்டழுது பகவானைத் துதிக்கலானான். அப்பொழுது விஷ்ணு முதலையுடன் அவனைத் தண்ணீரினின்றும் வெளியி லெடுத்து, முதலையைக் கொன்று அவ னுக்கு மோட்சத்தைக் கொடுத்தார்.

இம்முதலை முற்பிறவியில் ஒரு கந்தரு வனாக இருந்தது. அக் கந்தருவன் பெயர் ஹூஹூ. அவன் ஆற்று நீரில் விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு முனிவர் நீராடுவதற்காக அவ்விடம் வந்தார். கந்தருவன் அவருடைய காலைப்பிடித்து இழுத்ததனால், "நீ முதலையாவாய்" என்று முனிவர் அவனுக்குச் சாபமிட்டார். அப் பொழுது அவன் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ள, முனிவர் "விஷ்ணு உனக்கு நற்கதி கொடுப்பார்" என்று சொல்லிவிட்டுப் போனார். அதன்படியே எல்லாம் நடந்தது.

கஜேந்திரனுடைய கதையும் இது போன்றதாகும். கஜேந்திரன் முந்திய பிறவியில் இந்திரத்யும்னன் என்னும் அரச னாக இருந்தான். அகத்திய முனிவர் அவனிடஞ் சென்றபொழுது அவன்

அவனை ஆதரிக்கவில்லை. அவனுடைய இறுமாப்பைக் கண்டு, "நீ யானை யாவாய்" என்று முனிவர் சாபமிட்டார். பிறகு அரசன் பணிவுடன் வணங்கியதன்மேல், "உன்னைத் திருமால் தாமேவிடுவிப்பார்" என்று சொல்லியிருந்தார். அவ்வாறே நடந்தேறியது.

---

14. நன்னடக்கையின் பயன்

(சியவனரும் சுகன்னியும்)

சரியாதி என்னும் பெயரையுடைய ஓர் அரசனிருந்தான். அவனுக்குச் சுகன்னி என்று ஒரு புதல்வியிருந்தாள். ஒரு நாள் அரசன் புதல்வியோடு வனத்தின் காட்சியைப் பார்த்துக்கொண்டே சியவன முனிவரின் ஆசிரமத்தின் அருகில் வந்தான். அச்சமயத்தில் முனிவர் தவம் புரிந்துகொண்டிருந்தார். அவர் வெகு காலமாய்த் தவம் புரிந்துகொண்டிருந்தமையால் அவர் மேல் புற்று வளர்ந்திருந்தது. அப்புற்றிற்கு ஒருபுறத்தில் ஒரு துவாரமிருந்தது. அதனின்றும் ஒளி வீசிக்கொண்டிருந்தது. சுகன்னிக்கு அதைக் காண வேடிக்கையாயிருந்தது. ஆதலால் அதனுள் என்ன இருக்கிறதென்று அறிய

பேரவாக்கொண்டு ஒரு முள்ளை எடுத்து அத்துவாரத்தில் குத்தினள். அப்பொழுது அதினின்றும் இரத்தம் வெளிவரலாயிற்று. துவாரத்தினின்றும் ஒளிவீசிக்கொண்டிருந்தது முனிவருடைய கண்களாகும். அதில் முள் குத்தியதும் முனிவர் கோபங்கொண்டார். தன் மகளால் அறியாமையின் காரணமாகச் செய்யப்பட்ட தவறை மன்னித்தருள வேண்டுமென்று அரசன் கேட்டுக்கொண்டதன் மேல் முனிவர் அக் கன்னியைத் தனக்கு மணஞ்செய்து கொடுக்கும்படி கேட்டார். முனிவர் வயது சென்றவராயிருந்தனர். இருந்தாலும் அவர் கோபங்கொள்வாரென்ற பயத்தினல் அரசன் அதற்கு ஒப்புக்கொண்டு, சியவன முனிவருக்குத் தன் மகளைக் கொடுத்து விவாகம் செய்துவைத்தான். முனிவர் பெருங் கோபக்காரரென்று சுகன்னிக்கு முன்னரே தெரியும். ஆதலால் அவள் தன் கணவரின் மனதறிந்து, மிக வணக்கத்துடன் நடந்து, அல்லும் பகலும் அவருக்குப் பணிவிடை ஆற்றிவந்தனள். இதனல் முனிவர் அவள்பால் மிகவும் அன்பு பாராட்டிவந்தார்.

இங்ஙனமிருக்க, ஒரு நாள் அசுவினி குமாரர்கள் சியவன முனிவரின் ஆசிரமத்திற்கு வந்தனர். அப்பொழுது சுகன்னி அவர்களைத் தக்கபடி உபசரித்தாள். அதைக் கண்டு அவர்கள் அகமகிழ்ந்து, "உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள்" என்று முனிவரை நோக்கிச் சொல்ல, அவர் "நான் வயோதிகனாகிவிட்டேன். எனக்கு மறுபடியும் இளமைப் பருவத்தைக் கொடுங்கள்" என்றார். அசுவினி குமாரர்கள் "நல்லது, அப்படியே ஆகட்டும்" என்று சொ[illegible]லி அவரை ஒரு ஓடையில் மூழ்குவி[illegible]ர். மூழ்கி எழுந்ததும் கிழவராயிருந்த [illegible] இளமையை அடைந்தார்.

யௌவனத்தை அடைந்த முனிவர் ஒரு நாள் தம் மனைவியுடன் பேசிக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் சுகன்னியின் பிதாவாகிய சரியாதி ராஜன், முனிவரை யாகத்திற்கு அழைக்கும் பொருட்டு வந்தான். அவனுக்குத் தன் மருமகனின் உருவம் தெரியவில்லை. ஏனென்றால், முனிவர் மறுபடியும் யௌவனத்தை அடைந்த செய்தி அவனுக்குத் தெரியாது. அரசன் திகைத்திருப்பதைக் கண்டு, சுகன்னி அசுவினி குமாரர்கள் அருள் புரிந்த விவரத்தை அவ

னுக்குச் சொன்னாள். அப்பொழுது, புதல்வி தன் கற்பினால் தன் பதியைக் களிப்புறச் செய்ததல்லாமல், அசுவினி குமாரர்களை ஆதரித்து அவர்களால் நாயக னுக்கு நன்மை செய்வித்ததும் கேட்டு அரசனுக்கு மிகவும் ஆனந்த முண்டா யிற்று அசுவினி குமாரர்கள் செய்த இப் பேருபகாரத்திற்குக் கைம்மாறு சியவன முனிவர் சீக்கிரத்தில் செய்தார். அவர் சரியாதி ராஜன் மூலமாய் யாகம் செய் வித்து, அதில் அசுவினி குமாரர்களுக்குச் சோம ரசத்தைக் கொடுத்தார். இதற்கு முன் அவர்களுக்குச் சோமரசம் கிடைத்துக் கொண்டிருக்கவில்லை. அது அப்பொழுது முனிவரால் கொடுக்கப்பட்டதைக் கண்டு இந்திரன் கோபங்கொண்டு அவரைக் கொன்றுவிடும்பொருட்டுத் தன் வச்சிராயு தத்தைக் கையிலெடுக்க முயன்றான். ஆனால் முனிவரின் திறமை நிகரற்றதா யிருந்தமையால், அவர் அவ் வச்சிராயு தத்தை இடம்விட்டு அசையாமற் செய்து விட்டனர். அப்பொழுது இந்திரனால் ஒன் றும் செய்ய முடியவில்லை. அதுமுதல் அசுவினி குமாரர்களுக்கு யக்ஞத்தில் சோமரசம் கிடைக்கலாயிற்று.

---

15. நாபாகன் கதை

நபகன் என்னும் பெயருடைய ஒரு முனிவர் இருந்தார். அவருக்கு நான்கு குமாரர்கள் இருந்தனர். அவர்களுள் நாபாகன் என்னும் பெயருடைய ஒருவன் தன் தந்தையிடம் அநுமதி பெற்றுத் தவம் புரியும்பொருட்டுக் கானகஞ் சென்ருன். அப்பொழுது அவனுடைய மற்ற மூன்று சகோதரர்களும் அவனை ஏமாற்ற எண்ணங் கொண்டார்கள். பிதா வயோதிகராயிருந்தபடியால் அவரைக் கேட்காமலே அவர் சொத்தை எல்லாம் அம்மூவரும் பங்கிட்டுக் கொண்டனர். நாபாகனுக்காக அவர்கள் ஒன்றும் வைத்திலர்.

நெடுநாட் கழித்து நாபாசன் தவத்தை முடித்துக்கொண்டு இல்லத்திற்குத் திரும்பி வந்தான். அப்பொழுது தகப்பன் மூலமாய்ச் சகல சங்கதியும் அவனுக்குத் தெரியவந்தது. தவப் பலத்தினுல் அவனுக்கு நினைத்ததெல்லாம் செய்யக்கூடிய நிகரற்ற சாமர்த்தியம் உண்டாகியிருந்தது. வேண்டுமானுல் தன் சகோதரர் அநியாயமாய் எடுத்துக்கொண்ட சொத்தை மீட்டிருப்பான். அவன் சாந்த குணமுள்ளவனுதலால், இனி என்ன செய்வதென்று பிதாவைக் கேட்டான். நாபாகன் தன் கட்டளைக்கு உட்பட்டிருந்ததல்லாமல், சாந்த

சுபாவமுடையவனையும், விசார சீலனையும் இருந்ததைக் கண்டு அவன் பிதா மிகவும் ஆனந்தமடைந்தார். அப்பொழுது அவர் மகனை நோக்கி, "குழந்தாய், நீ புத்திசாலி யாயிருப்பதோடு வேத சாஸ்திரங்களையும் கலைகளையும் உணர்ந்தவனாய் இருக்கிறாய். நீ எளிதாகப் பணம் சம்பாதிக்கலாம். ஆதலால் நீ உன் சகோதரர் பேச்செடுக்காமல் அருகேயுள்ள அங்கிரா ரிஷி யாகம் செய்து கொண்டிருக்கும் இடத்திற்குச் செல். இரித்துவிஜர்களுக்கு வேதத்திலிருக்கும் இரண்டு சூத்திரங்கள் மறந்துபோயிருக்கிற படியால் யாகம் தடைபட்டு நிற்கின்றது. இச்சமயத்தில் நீ அவ்விடம் சென்று அவ்விரண்டு சூத்திரங்களையும் ஞாபகப்படுத்திக் கொடுப்பாயாகில் யாகம் முடிவுபெற்று உனக்கு ஏராளமான பொருள் கிடைக்கும்" என்றார். பிதாவின் சொல்லுக்கு இணங்கி நாபாகன் வேள்வி நடந்துகொண்டிருக்குமிடஞ் சென்று, தந்தை சொற்படி இரித்துவிஜர்களுக்கு மறந்துபோயிருந்த சூத்திரங்களை ஞாபகப்படுத்திக் கொடுத்தான். அதனால் இரித்துவிஜர் மகிழ்ச்சியடைந்து அவனுக்கு ஏராளமான பொருள் கொடுத்தனர். அப்பொருளைக் கொண்டு அவன் இல்லத்திற்குத் திரும்பினான். அதற்குள் ஒரு காலபுருஷன் திடீரென்று தோன்றி, அவ்விடத்திலிருந்த சகல பொருள்களும்

தனதென்று சொல்லி நாபாகனுக்குக் கிடைத்த பொருளை எடுத்துக்கொண்டு போகவிடாமல் அவனைத் தடுத்தான். அப்பொருள் யாருடையது என்பதைப்பற்றி அவ்விருவருக்கும் விவாதம் உண்டாயிற்று. ஒருவரும் வாதத்தில் பின்வாங்கவில்லை; முடிவில் மூன்றுவது ஆள் ஒருவன் மூலமாய் வழக்கைத் தீர்த்துக் கொள்வதென்று அவ்விருவரும் தீர்மானித்துக்கொண்டனர். நாபாகனுடைய பிதா நபகன் எப்படித் தீர்ப்புச் செய்வாரோ அப்படி நடந்துகொள்வதென்றும், அதுவரையில் காலபுருஷன் அப் பொருளைக் காப்பாற்றுவதென்றும் நிர்ணயிக்கப்பட்டது. நாபாகன் தன் தந்தையினிடம் சென்று எல்லா விவரங்களையும் உரைக்க, அவர் சற்று நேரம் ஆலோசித்து பிறகு " அக்கால புருஷன் சொல்வது உண்மைதான். அப்பொருளெல்லாம் அவனைச் சேர்ந்ததுதான்" என்றார். தன் தந்தை செய்த இவ் விசித்திரமான தீர்ப்பைக் கண்டு நாபாகனுக்கு ஆச்சரியமாயிருந்தது. என்றாலும், தந்தையால் செய்த தீர்ப்பைச் சரியென்று ஒப்புக்கொண்டு திரும்பிச்சென்று காலபுருஷனிடம் அதைச் சொன்னான்.

நாபாகனுக்கு அவன் பிதாவினிடத்திலிருந்த திடவிசுவாசத்தையும், சத்தியத்தின்கண்ணிருந்த ஆர்வத்தையுங் கண்டு

காலபுருஷன் மகிழ்ந்து, "நாபாகனே! நான் யார் என்பது உனக்குத் தெரியாது. நான் உருத்திரன். உன்னைச் சோதிக்கும் பொருட்டு நான் கால புருஷ வடிவத்தைப் பூண்டுவந்தேன். உன் பிதா பட்சபாதம் செய்யாமல் சத்தியத்தைக் கருதித் தக்கபடி தீர்ப்புச் செய்தார். நீயும் பொருளுக்கு ஆசைப்படாமல் உனக்கு விரோதமாகச் செய்த தீர்ப்பைத் தெரிவிக்கும்பொருட்டு இவ்வளவு தூரம் நடந்துவரும் சிரமத்தை எடுத்துக்கொண்டனை. இதனால் நான் மிகவும் களிகூர்ந்தேன்; இப்பொருளெல்லாம் உன்னுடையதுதான். நீயே எடுத்துக் கொள். நானும் மகிழ்ச்சியுடன் இன்னும் பொருள் தருகிறேன்; அதையும் பெற்றுக் கொள்" என்று சொல்லி உருத்திரன் அவனுக்கு மிகுதியான திரவியத்தைக் கொடுக்க, அதைப் பெற்றுக்கொண்டு நாபாகன் இல்லஞ் சென்று, பிதாவை மகிழ்வித்துத் தானும் ஆனந்தமாய் வசிக்கலானான்.

16. சநாதன தருமம்

ஒரு நாள் யுதிஷ்டிரர் நாரதரை நோக்கி, " சுவாமி! சநாதன தருமம் என்றால் என்னவென்பதைப்பற்றித் தங்களைப் போன்றவர்கள் சில அருள்மொழிகள் திருவாய் மலர்ந்தருளக் கேட்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதைப்பற்றி நான் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். வருணாசிரம தருமத்தை முறைப்படி நடத்திவந்தால் ஈசுவரனை அடையலாம் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள், ஆகையால் சநாதன தருமம், வருணம், ஆசிரமம் இவைகள்பற்றிய நியமங்கள் யாவையெனத் தயவு செய்து உரைக்கவேண்டும் " என்று வேண்டினார்.

அதற்கு நாரதர் கூறியதாவது : " இராஜனே ! நீ நல்ல கேள்வி கேட்டனை. உன் கேள்விக்கு நான் விடையளிக்கிறேன். அதை நீ கவனித்துக் கேட்பாயாக. சநாதன தருமத்தின் முதல் நூல் வேதமாகும். இவ் வேதத்தை யார் சரிவர அறிந்தனரோ அவரே அவ்வேதத்தின் ஆதாரத்தால் ஸ்மிருதி என்னும் நூலை எழுதினார். அவற்றின்படி நாம் எப்பொழுதும உண்மை பேச வேண்டும்; சகல பிராணிகளிடத்தும் கருணை காட்டுதல் வேண்டும்; பரிசுத்தமாய் இருக்கவேண்டும் ; பொறுமை வேண்டும் ;

எந்தக் காரியம் செய்யத்தக்கது, எது தகாதது என்பதைத் தீர யோசித்தபின்னரே எதையுஞ் செய்யத் தலைப்படவேண்டும்; மனதைக் கட்டுப்படுத்தவேண்டும்; எந்தப் பிராணிக்கும் துன்பத்தைக் கொடுக்கலாகாது; கடினமான பிரம்மசரியத்துடன் இருக்கவேண்டும்; இயன்றவரை தான தருமம் செய்யவேண்டும்; நடத்தையில் நேர்மையிருக்கவேண்டும்; மனக்களிப்புடனிருக்கவேண்டும்; துர்வழக்கங்களுக்கு இடங்கொடுக்கலாகாது; பயனற்ற பேச்சுக்களைப் பேசலாகாது; மனத்தில் சதாகாலமும் கடவுளைப்பற்றிய சிந்தனை நிகழவேண்டும்; இவைகள் தருமத்தின் பொதுவான இலட்சணங்கள்."

நாரதர் பின்னும் சொன்னதாவது;— 'இராஜனே, இப்பொழுது உனக்கு வருணத்தைப்பற்றியும், ஆசிரம தருமத்தைப் பற்றியும் சொல்லுகிறேன். வருணம் நான்கு வகைப்படும்; (1) பிராமணர், (2) க்ஷத்திரியர், (3) வைசியர், (4) இதரர்.

'வித்தையைக் கற்பதும் கற்பிப்பதும், யாகஞ் செய்வதும் செய்விப்பதும், தானத்தைக் கொடுப்பதும் வாங்குவதும் ஆகிய இவ்வாறும் அந்தணர்களுடைய கடமைகளாம். இவற்றை யார் சரிவர நிறைவேற்றுகின்றனரோ, அவர்கள் தாம் உண்மையான

பிராமணர்களாவார்கள். மற்றவர்கள் பேருக்கு மாத்திரமே பிராமணர்கள் என்று சொல்லப்படுவர். இவர்களைப் 'பதிதர்கள்" (பேதை) என்றும் சொல்வதுண்டு.

'கல்வி கற்பது; வேள்வி செய்வது, தானம் கொடுப்பது, குடிகளைக் காப்பது' முதலியன க்ஷத்திரியர்களைச் சார்ந்தன்வாம். இவைகளை ஒழுங்காகச்செய்பவர்கள் மாத்திரமே உண்மையான க்ஷத்திரியர்கள்.மற்றவர்கள் பெயருக்கு மாத்திரமே க்ஷத்திரியர்கள்.

'வித்தை பயில்வது, யாகஞ் செய்வது, தானம் கொடுப்பது, சாகுபடி செய்வது அல்லது நிலத்தை உழுவது, பசுக்களை இரட்சிப்பது' முதலியன வைசியர்களைச் சார்ந்த தொழில்களாகும்.

'பிறருக்கு ஊழியஞ் செய்வது இதரர் களுடைய கடமையாம்.

'மேற்கூறியவை நான்கு வருணத்தாருடைய தினசரி தருமங்களாம். ஆனபோதிலும் இடையூறுகள் நேர்ந்தால் இதர தொழில்கள் செய்து வயிற்றை வளர்க்கத் தடையொன்றுமில்லை. க்ஷத்திரியர்களுக்குப் பெருந்தன்மை அவசியமாய் இருக்கவேண்டும். ஆகையால் அவர்கள் கூடியவரையில் இழிவான காரியங்களைச் செய்யாமலிருக்க வேண்டும். ... ...

"பிராமணர்களிடத்தில் சாந்தம், தமம் (புலன்களை யடக்குவது), தவம், தூய்மை, முக மலர்ச்சி, அழகு, தயை, ஞானம், ஈசுவர பக்தி, சத்தியம் முதலிய குணங்கள் இருக்க வேண்டும்.

'க்ஷத்திரியர்களிடத்தில் பலம், பராக்கிரமம், தைரியம், உதார குணம், பொறுமை, இனிமை முதலியன இருக்கவேண்டும்.

'வைசியர்களிடத்தில் தெய்வ பக்தி, குரு பக்தி, தரும சிந்தனை, திரவியத்தைத் தேடுவதற்குரிய முயற்சி, விவகாரத்தில் அறிவு, உத்தியோகத்தில் விருப்பம் முதலிய குணங்கள் இருக்கவேண்டும்.

'இதரர்களிடத்தில் பெரியாரை வணங்கல், கபடமில்லாமல் வேலை செய்தல், திருடாமலிருத்தல், உண்மை பேசுதல், சுத்தமான நடத்தை முதலிய குணங்கள் இருப்பது மிகவும் அவசியம்.

'இவைகள் நான்கு வருணத்தாரின் நியமங்களாயின. இப்பொழுது ஆசிரமங்களின் நியமங்களைச் சொல்லுகிறேன். ஆசிரமங்கள் நான்கு வகைப்படும்; முதலாவது பிரம்மசரியம்; இரண்டாவது கிரகஸ்தம்; மூன்றாவது வானப்பிரஸ்தம்; நான்காவது சன்னியாசம்.

'பிரம்மசரிய ஆசிரமத்தின் நியமங்கள்:— பிரம்மசாரிகள் சகல இச்சைகளையும் அடக்கி, குருவின் வீட்டிலிருந்து அவர் சொற்படி நடக்கவேண்டும்; அவருக்கு ஊழியஞ் செய்து அவருடைய மனத்தை மகிழ்விக்கவேண்டும்; அவர் கற்பிக்கும் வித்தையைக் கவனத்துடன் கற்கவேண்டும். அஜீர்ணத்தை உண்டாக்கக்கூடியதும், கொழுப்புத் தரக்கூடியதுமான ஆகாரத்தை உட்கொள்ளாமல், அற்ப ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும். பகலில் நித்திரை செய்யலாகாது; பெண்களிடத்தில் பேசும்பொழுது மிதமாயும் வணக்கமாயும் பேசவேண்டும்; முரட்டுத்தனம் செய்யலாகாது; பகட்டில்லாத உடை தரிக்கவேண்டும்; எவ்விதமான துர்வழக்கத்தையும் கைக்கொள்ளலாகாது; கெட்ட வாலிபர்களுடன் சேரக்கூடாது; குருவின் கட்டளைக்கு உட்பட்டு நடந்து அவரிடத்தில் திட பக்தி வைத்து, அவர் சொல்வதெல்லாம் தன் நன்மைக்காகவே யென்று உணரவேண்டும்.

'கிரகஸ்தாசிரமத்தின் நியமங்கள்:— கிரகஸ்தர்கள் பிற ஸ்திரீகளுடன் பேசுவதானல் தூரத்திலிருந்து மரியாதையாய்ப் பேசவேண்டும்; மது, மாமிசம் முதலியவைகளை விலக்கவேண்டும்; தம் தம் வீட்டில் எல்லோரிடத்திலும் பிரியமாயிருக்கவேண்டும்; அவர்களுடைய நன்மைக்காக எப்

பொழுதும் பாடுபடவேண்டும்; எல்லோ ரிடத்திலும் அன்பாகவும் விநயமாகவும் நடந்துகொள்ளவேண்டும் அவர்களுக்குச் செய்யவேண்டிய தம் கடமைகளை எல்லாம் தக்க காலத்தில் தக்கபடி நிறைவேற்றி, எல்லோருடைய அன்பையும், விசுவாசத் தையும் சம்பாதித்துக்கொள்ளவேண்டும்; நியாயமான வழியில் பொருளைத் தேட வேண்டும்; தம் வீட்டைத் தேடி வரும் விருந்தினரைத் தக்கபடி ஆதரிக்கவேண் டும்; பெண்களைக் கௌரவப்படுத்தவேண் டும்; பசியுடனிருப்பவர்களுக்கு அன்னம் கொடுக்கவேண்டும்; கூன், குருடு முதலிய வர்களுக்குத் தருமம் செய்யவேண்டும்.

'வானப்பிரஸ்தாசிரமம் என்ருல், மனைவி யோடு வீட்டிலிருந்து கடமைகளை எல்லாம் சரிவர நிறைவேற்றிய பிறகு இல்லறத்தி னின்றும் விலகியிருப்பது. வானப்பிரஸ்தர் கள் கந்த மூலங்கள், கனிவர்க்கங்கள் முதலி யன தின்று காட்டில் வசிக்கவேண்டும்; அகங்காரத்தையும், இல்லறப் பற்றையும் விட்டுவிடுவதனுல் மெய்ஞ்ஞானம் உண்டா கிறது.

'இவ்வாருக, முதலில் பிரம்மசரியம், பிறகு கிரகஸ்தம், அதற்குப் பிறகு வானப் பிரஸ்தம் ஆகிய இம்மூன்று ஆசிரமங்களி லிருந்து மனிதன் விலகிச் சன்னியாச மடை



சமுத்திர மதனம்

கின்றான். இல்லறத்தைப்பற்றி மனதிற்கு வெறுப்புண்டாவதும், அதனால் உண்மையான ஞானமுண்டாகிக் கடவுளிடத்தில் நிலைத்த அன்பு ஏற்படுவதும் சன்னியாசத்தின் இலட்சணங்களாகும்.

'இத்தகைய சன்னியாசாசிரமத்தில் இருந்துதான் மனிதன் சரீரத்தை விட்டு முக்தி பெறவேண்டும்.'

---

17. சமுத்திரமதன வரலாறு

ஒரு சமயம் இந்திரன் ஐராவதத்தின் மேல் உட்கார்ந்தது, ஊர்வலம் வருகையில் வழியில் துருவாச முனிவரை சந்திக்க நேர்ந்தது. துருவாசர் அவனுக்கு ஒரு மாலையைப் பிரசாதமாகக் கொடுத்தார். அதை அவன் ஐராவதத்தின் மேல் போட்டான். அது மாலையைக் காலினடியில் போட்டுக் கசக்கி வீசிஎறிந்துவிட்டது. துருவாச முனிவரோ மிகுந்த கோபக்காரரர். தாம் கொடுத்த பொருளை இப்படி அலட்சியம் செய்ததைப்பார்த்து அவர் கோபங்கொண்டு உடனே இந்திரனை நோக்கி, "நீ ஐசுவரியத்தினால் மமதை கொண்டு என்னை அவமதித்தனை. ஆதலால் உன்னுடைய மூவுலகமும் தரித்திர மடையும்" என்று சாபமிட்டார். முனிவர் வாக்குப் பொய்யாகுமா? ஆதலால்

இந்த இடுக்கணுக்கு அஞ்சி இந்திரன் முதலிய சகல தேவர்களும் பிரமதேவரை அழைத்துக்கொண்டு திருமாலிடம் சென்றனர். அப்பொழுது திருமால். "அசுரர் களுடன் நட்பு கொண்டு அமிருதத்தை அடைய முயற்சி செய்யுங்கள்" என்றனர்.

எனவே, சமுத்திர மதனம் செய்து (தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பது போலச் சமுத்திரத்தைக் கடைந்து), அதிலிருந்து வெண்ணெய் போன்ற அமிருதம் எடுப்பதாக நிர்ணயிக்கப்பட்டது. பெரிய கடலைக் கடையவேண்டுமானல் அதற்கேற்ற மத்து வேண்டும். ஆதலால் மந்தர பருவதத்தை மத்தாகச் செய்தனர். வாசுகி என்ெறாரு நாகராஜனிருந்தான். அவனைக் கயிருக்கி மத்தில் சுற்றி, அதன் ஒரு புறத்தைத் தேவர்களும், மற்ெறாரு புறத்தைப் பலி, பௌலோமன், காலகேயன் முதலிய அசுரர்களும் பிடித்துக்கொண்டு, அனந்தனுடைய முதுகில் மத்தின் முனையை வைத்துக் கடைவதற்கு ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் மந்தர பருவதம் அடியிற்போக ஆரம்பித்தது. அப்பொழுது திருமால் ஆமையின் உருவமெடுத்து (கூர்மாவதாரம்) அப் பருவதத்தைத் தம் முதுகினல் தாங்கிக்கொண்டார். வாசுகியின் முகம் அசுரர்கள் பக்கத்திலிருந்தது. சிரமத்

னால் அதன் வாயிலிருந்து பயங்கரமான அக்கினிச் சுவாலைகள் கிளம்பின. அதனால் சில அசுரர்கள் மரணமடைந்தனர். பின்னர், சமுத்திரம் கடையப்பட்டு, அதனின்றும் பல அற்புதமான பொருள்கள் வெளிவர லாயின. முதலில் ஆலாலம் என்னும் விஷம் வந்தது. அதை எடுத்துக்கொள்ள ஒருவ ரும் துணியவில்லை. தரைமேல் எடுத்துப் போடலாமென்றால் பூமி எரிந்து சாம்பலாகி விடும். ஆதலால் மக்களுடைய நன்மையை கருதி அதைப் பரமசிவன் குடித்துவிட்டார். அவ்விஷம் அவரைப் பாதிக்காமலிருக்க வில்லை. அவ்விஷத்தினால் அவருடைய கண்டம் கறுத்துப்போய்விட்டது. அதனாற் றான் அவருக்கு நீலகண்டன் என்ற பெயர் ஏற்பட்டது. விஷத்தை அருந்தும்போது அதன் இரண்டொரு துளிகள் பூமியின் மீது விழ, அதைத் தேள், பாம்பு முதலிய பிரா ணிகள் குடித்து, அதனால் அவைகளெல் லாம் விஷமுடையனவாயின.

விஷம் தோன்றிச் சங்கரர் கண்டத்தில் மறைந்தபின், சமுத்திரத்திலிருந்து காம தேனு புறப்பட்டது. அதை முனிவர்கள் பெற்றுக்கொண்டனர். உச்சைசிரவா என் னும் அசுவம் ஒன்று புறப்பட்டது. அதைத் தேவர்கள்.தைத்தியர்களுடைய அரசனாகிய பலி என்பவனுக்குக் கொடுத்தனர்.

கௌஸ்துபம் என்னும் இரத்தினத்தைத் திருமால் எடுத்துக்கொண்டார். பாரிசாத விருட்சம் சுவர்க்கலோகத்தில் வைக்கப் பட்டது. பின்னர் இலக்குமி தோன்றினள். அவள் தைத்தியர்களை மணம் புரியாமல் திருமாலை மணம் புரிந்தனள்; அதனால் தைத்தியர்கள் கோபங்கொண்டு, இலக்குமிக் குப்பின் தோன்றிய "சுரா" (மது) வை எடுத்துக்கொண்டு சென்றனர். அதற்குப் பிறகு கையில் அமிருத கலசத்தை ஏந்திக் கொண்டு 'தன்வந்திரி' என்னும் புருஷன் புறப்பட்டான். தைத்தியர்கள் முரட்டுத் தனமாய் அவன் கையிலிருக்கும் அமிருத கலசத்தை எடுத்துக்கொண்டு போய்விட் டனர்.

இவ்வளவு சிரமப்பட்டுத் தேடிய அமிருதத்தை அசுரர்கள் கொண்டுபோய் விடவே, தேவர்களுக்கு மிகுந்த கவலை யுண்டாயிற்று. அப்பொழுது அசுரர்களை மயக்கித் தேவர்களுடைய காரியத்தைச் சாதிக்கும்பொருட்டுத் திருமால் மோகினி வடிவம் பூண்டனர்.

18. மோகினியின் விருத்தாந்தம்

அமிருதத்தைக் கொண்டுபோன தைத்தியர்களில் ஒருவன், "நான்தான் முதலில் அமிருதத்தைக் குடிப்பேன்" என்று சொன்னான். அச்சமயத்தில் மோகினி வடிவம் பூண்ட திருமால் அவ்விடம் வந்தார். மோகினியின் அழகைக் கண்டு தைத்தியர்களுக்கு ஆனந்தமுண்டாயிற்று. தமக்குள் நடந்துகொண்டிருந்த சண்டையை இந்தப் பெண்ணின் மூலமாகத் தீர்த்துக்கொள்வது நலமென்று கருதி, அசுரர்கள் அமிருதத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும்படி மோகினியைக் கேட்டுக்கொண்டனர். தன்னைப் பற்றிச் சந்தேகம் வரக்கூடாதென்று எண்ணி அவள் சாக்குப் போக்குகள் சொன்னாள். "வேண்டாம், வேண்டாம். என்னால் பட்சபாதம் ஏற்பட்டுவிடும். பகிர்வதில் சிலருக்குக் குறைவாயும், சிலருக்கு அதிகமாயும் கிடைத்தால் வீணாக அநியாயம் ஏற்படும். ஆகையால் இத்தகைய வேலையை நீங்கள் என்மேல் சுமத்துதல் ஆகாது" என்று மிகவும் கௌரவமாய்ப் பேசினாள். அதனால் அசுரர்களுக்கு அவள் மேல் விசுவாசம் அதிகரித்து, "இல்லை; நீதான் இதைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்" என்று வற்புறுத்தி, அந்த அமிருத

கலசத்தை அவள் கையில் கொடுத்தனர். கொடுக்கவே, அவளும் அக்காரியத்தைச் செய்ய அங்கீகரித்தனள். ஆனால் அதற்கு முன்பாக, அவள் அசுரர்களிடம் தான் செய்யப்போகும் காரியத்தில் ஒருகால் தவறு ஏற்படுமாயின் அதற்காகச் சற்றேனும் அதிருப்திகொள்ளக்கூடாதெனக் கேட்டு, அவ்விதமே அவர்களிடம் உறுதி பெற்றுக்கொண்டாள். பின்னர் அவள் ஒரு புறத்தில் தேவர்களையும், மற்றொரு புரத்தில் அசுரர்களையும், உட்காரவைத்து, மதுரமானதும் மனதைக் கவரக்கூடியது மான இன்மொழிகளால், "இந்தத் தேவர்கள் மிகவும் பொறுமையற்றவர்களாயிருக்கின்றனர். ஆகையால் அவர்களுடைய பங்கை அவர்களுக்கு முதலில் கொடுத்துவிடவேண்டும் என்று கூறித் தேவர்களுக்கு அமிருதத்தை வழங்கினாள். அவளுடைய கபடம் தைத்தியர்களுக்கு விளங்கவில்லை என்பதல்ல. ஆனால் அவர்கள் என்ன செய்வார்கள்? அவள் என்ன செய்தபோதிலும் எதிர்த்துப் பேசுவதில்லை யென்று அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் வாயைத் திறவாமலிருந்தனர். தைத்தியர்களில் ராகு என்பவன் எவருமறியாது தேவ வடிவங்கொண்டு சந்திரனுக்கும் சூரியனுக்கும் மத்தியில் போய் உட்கார்ந்து, தேவர்

களுடன் அமிருதத்தை வாங்கினன். இதற்குள் சந்திர சூரியர்கள் மோகினிக்குக் கண்களால் சைகை செய்ய, அந்த அமிருதம் நெஞ்சுக்கு அடியில் இறங்குவதற்கு முன் விஷ்ணுவின் சக்கரத்தினுல் அவனுடைய சிரசு துண்டிக்கப்பட்டது. ஆனுல், அவன் சாகாமல் அமரனுன். விஷ்ணு அவனை நவக்கிரகங்களில் ஒருவன் ஆக்கினுர். சந்திர சூரியர்கள் சைகை காட்டினுரென்று அவர்கள்மேல் மிகவும் கோபங்கொண்டு அவர்களை விழுங்கும்பொருட்டுப் பௌர்ணமை, அமாவாசை ஆகிய இவ்விரண்டு தினங்களிலும் அவன் அவர்கள்மேல் பாய்வதுண்டு. சந்திரசூரியர்களைக் கிரகணம் பிடிப்பதற்கு இதுதான் காரணமென்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவர்களுக்கு அமிருதம் கொடுத்துக்கொண்டே வர, முடிவில் எல்லாம் செலவாகித் தீர்ந்துவிட்டது. அப்பொழுது விஷ்ணு மோகினி வடிவத்தை நீக்கி, தம் இயற்கை வடிவத்தைக் காண்பிக்க, அசுரர்கள் அவருடைய கபடத்தை யுணர்ந்து, கோபங்கொண்டு தேவர்கள்மேல் அமிதமான பகைமை பாராட்டலானுர்கள்.

19. அம்பரீஷன் சரித்திரம்

ஏற்கனவே உங்களுக்கு நாபாகனின் வரலாறு சொல்லப்பட்டது. இந்த நாபாக னின் புத்திரன் அம்பரீஷன். இவன் பெரிய விஷ்ணு பக்தன். இவன் முறைப் படி இல்லறததை நடத்திவந்தான். இவன் வசிஷ்டர், கௌதமர் முதலிய மகரிஷிகள் மூலமாய் அநேக அசுவமேத யாகங்கள் செய்வித்தான். ஆனால் அவனுக்கு இறுதி யாக யாகங்கள் முதலிய கர்மங்களைவிடப் பக்திதான் மேன்மையானதென்று தோன்றியதனல், அவன் பக்தி செய்து விஷ்ணுவை மகிழ்வித்து அவரிடமிருந்து சுதரிசன சக்கரத்தைப் பெற்றுன். அதிர்ஷ்ட வசத்தினல், அம்பரீஷனுக்குக் கிடைத்த மனைவியும் அவனைப்போலவே பக்தியுள்ளவளா யிருந்தனள். விஷ்ணு பக்தர்கள் சாதனத் துவாதசி விரதமிருப்பது வழக்கம். அஃதாவது, தசமியன்று மத்தி யானம் ஒரு முறை யுண்டு, ஏகாதசியன்று முழுப் பட்டினி கிடந்து, துவாதசியன்று விஷ்ணு பூஜையும் பிராமணர்களுக்கு மரியாதையும் செய்து, பிறகு வழக்கம்போல் உணவுகொள்வர்.

இவ்வாறே அம்பரீஷனும் செய்துவந் தான். ஒருநாள் துவாதசியன்று விஷ்ணு பூஜை ஆன பிறகு பிராமணர்களுடைய

உத்தரவுபெற்றுப் பாரணைசெய்யும் (உணவருந்தும்) தருணத்தில் துருவாச முனிவர் அவ்விடத்தில் தோன்றினர். அரசன் அவரைத் தக்கபடி உபசரித்து, உணவருந்திப் போகும்படி பிரார்த்திக்க, முனிவர் அதற்கு இசைந்து, நீராடும்பொருட்டு நதிக்குச் சென்றார். அவ்விடத்தில் நீராடிச் சந்தியாவந்தனம் முதலிய கர்மங்களைச் செய்துமுடிக்கச் சற்று அதிக நேரமாகி விட்டது. துவாதசி ஒரு நாழிகைதான் மிகுதியிருந்தது. அதுவரையில் அரசன் துருவாச முனிவரின் வரவை எதிர்பார்த்தான். அவர் வரவில்லை. அப்பொழுது அரசன் தருமசங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டான். சரியான நேரத்தில் உண்ணவிட்டால் விரத பங்கம் ஏற்படும். முனிவர் வருவதற்குமுன் உண்டால் அவருக்கு அவமானம் ஏற்படும். இவ்வாருக இரு பக்கத்திலும் இடையூறு ஏற்பட்டது. அப்பொழுது அரசன் பிராம்மணர்களிடத்தில் யோசனை கேட்க, அவர்கள், துளசியுடன் தீர்த்தத்தைச் சிறிது அருந்திஞல் பாரணை செய்த பலனும் கிடைக்கும்; முனிவருக்கு அவமானஞ்செய்த குற்றமும் ஏற்படா

தென்று சொல்ல, அரசன் அவ்வாறே செய்தான். சற்று நேரத்திற்குள் துருவாச முனிவர் தமது நித்திய காரியங்களை முடித்துக்கொண்டு திரும்பிவந்தனர். அரசன் தன்னை விட்டுவிட்டுப் பாரணை செய்த செய்தி தெரிந்ததும், அவருக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. உடனே அவர் தம் தலையிலிருக்கும் சடையில் ஒன்றை அவிழ்த்து, அதனின்று ஓர் அரக்கியை உற்பத்தி செய்து, அரசனிடம் சென்று அவனை அழிக்கும்படி அவளை ஏவினர். அவ்வரக்கி கையில் வாளைத் தரித்துக் கொண்டு அரசனைத் துரத்திச் சென்றனள்.

விஷ்ணு ஏற்கனவே அம்பரீஷனுக்குத் தமது சுதரிசன சக்கரத்தைக் கொடுத்திருந் தார். அரசனுக்கு ஏதாவது இன்னல் நேர்ந் தால், அவனை அதனின்றும் இரட்சிப்பது சக்கரத்தின் உபயோகமாகும். அந்தச் சக் கரம் அம்பரீஷனை இரட்சித்துக்கொண் டிருந்தது. அது முதலில் அந்த அரக்கியை அழித்துவிட்டுப் பிறகு துருவாசரைப் பின் தொடர்ந்தது. துருவாசர் போகுமிடமெல் லாம் அதுவும் சென்றது. அதைக் கண்டு அவர் பயந்து ஒளிந்துகொள்ள இடம்

தேடலானுர். அவருக்கு இடமே கிடைக்கவில்லே. கடைசியில் அவர் பிரம்மதேவரிடம் சென்ருர். அப்பொழுது பிரம்மதேவர் விஷ்ணுவின் சக்கரத்தைத் தடுக்கும் சக்தி தமக்கு இல்லேயென்ருர். பிறகு துருவாசர் சங்கரரிடம் சென்ருர் அவர் விஷ்ணுவிடம் கையைக் காட்டினர். துருவாசர் தம்மை இவ்விடையூறினின்றும் விடுவிக்கும்படி விஷ்ணுவை வேண்டிக்கொள்ள, அவர், "என்னுடைய சக்தியை அடக்கக்கூடிய சாமர்த்தியம் என் பக்தர்களிடத்தில் இருப்பதுபோல் என்னிடத்தில் இல்லே. ஆகையால் நீ யாருக்கு அநியாயம் பண்ணிஞயோ அவனிடத்திலேயே செல்வாயாகில் அவன் உன்னே இரட்சிப்பான்" என்ருர்.

இவ்வாருக எங்குப் போயும் பயனில்லேயென்று கண்ட துருவாச முனிவர் அம்பரீஷனிடம் சென்று, அவனுடைய காலே இறுகக் கட்டிக்கொண்டார். அப்பொழுது அரசன் முனிவர்மேல் கருணே கொண்டு அவரைச் சுதரிசன சக்கரத்தின் தொந்தரவினின்றும் விடுவித்தான்.

---

20. கல்மாஷபாத ராஜன் கதை

பகீரதனுடைய வமிசத்தில் சௌதாசன் என்று ஒரு வேந்தன் இருந்தான். இவனுக்குத்தான் பின்னர் கல்மாஷபாதன் என்னும் பெயர் ஏற்பட்டது. ஒரு சமயம் இவ்வரசன் வேட்டையாடும்பொருட்டு அரணியத்திற்கு ஏகியபொழுது அவ்விடத்தில் அவன் இரண்டு அரக்கர்களைக் கண்டான். அவர்களில் ஒருவனைக் கொன்றான். மற்றவன் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் அரசனைப் பழிவாங்கும்பொருட்டுப் பரிசாரகனுடைய கோலம் பூண்டு அரசனுடைய பாகசாலையில் வேலைக்கு அமர்ந்தான். இவ்வேந்தனின் அரண்மனையில் வசிஷ்ட முனிவர் யாகம்செய்யும்பொருட்டு வந்திருந்தனர். அவர் ஒரு நாள் உணவருந்த அமர்ந்தபொழுது அந்தப் பரிசாரகன் மனிதனுடைய மாமிசத்தை வேகவைத்து அவர் இலையில் பரிமாறினான். இது அரசன் கட்டளையின்மேல்தான் நடந்திருக்கவேண்டுமென்று அனுமானித்து முனிவர் அரசனை நோக்கி, 'நீ அரக்கனாகக் கடவாய்' என்று உடனே சாபமிட்டார். தான் ஒரு குற்றமும் செய்யாமலிருக்க, முனிவர் தனக்குப் பயங்

கரமான தண்டனை விதித்ததற்காக அரசன் சினங்கொண்டு, முனிவருக்குச் சாபம் கொடுக்கக் கையில் தண்ணீரை எடுத்த பொழுது, அரசி வந்து அரசனைச் சமாதானப்படுத்தினுள். அப்பொழுது கையிலெடுத்த நீரை என்ன செய்வதென்று அரசனுக்குக் கவலையுண்டாயிற்று. ஏனென்ருல், சபித்த நீரை நிலத்தில் கொட்டினுல் ஜனங்கள் நசித்துப்போவார்கள். ஆகையால் அரசன் அதைத் தன் காலில் ஊற்றிக் கொண்டான். அதனுல் அவன் கால்கள் கறுத்துப்போயின. இக்காரணத்தால் அவனுக்குக் கல்மாஷபாதன் என்ற பெயர் கிடைத்தது. வசிஷ்ட முனிவருக்கு உண்மை விளங்கி, தாம் நினைத்தது தவறென்று தெரியவே அவர், "இன்னும் பன்னிரண்டு வருடங்களில் உனக்கு முன்னிருந்த வடிவம் கிடைக்கும்" என்று சொல்லி அரசனை ஆசீர்வதித்தனர்.

21. புரூரவனும் ஊர்வசியும்

ஒரு நாள் நாரத முனிவர் புரூரவ சக்கரவர்த்தியின் மாளிகையினின்றும் புறப்பட்டு நேராக இந்திரலோகஞ் சென்று, அவ்விடத்தில் புரூரவனுடைய சௌந்தரியத்தைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசினார். அதைக் கேட்டுத் தேவர்களுடைய அப்ஸரையான ஊர்வசிக்கு அவனை மணந்து கொள்ளவேண்டுமென்ற எண்ணம் உதித்தது. அவள் புரூரவனிடம் சென்று, தனது இரண்டு விண்ணப்பங்களை நிறைவேற்றினால் அவனை மணம்புரிந்துகொள்வதாக நவின்றாள். அவற்றுள் முதலாவது: "என்னிடத்தில் இரண்டு ஆடுகள் இருக்கின்றன. அவைகளை என் மக்களாகப் பாவித்து அன்பு பாராட்டிவருகிறேன். எத்தகைய தொந்தரவும் உண்டாகாமல் அவைகளைக் காக்கவேண்டும்." இரண்டாவது, "எனக்குச் சுவர்க்கத்தில் அமிருதத்தையே புசிப்பது வழக்கமாயிருக்கிறது. ஆனால் இந்தப் பூலோகத்தில் அமிருதம் எங்கிருந்து கிடைக்கும்? ஆகையால் நெய்யையே அமிருதமென்று எண்ணி நான் வெறும் நெய்யையே அருந்தி உயிர் வாழ்

வேன். அன்னத்தைத் தொடப் போவதில்லை" என்றாள். இவ்விரண்டையும் அரசன் சரியென்று ஒப்புக்கொள்ள, ஊர்வசி அவனுடன் நீடியகாலம் உல்லாசமாக வசித்துக்கொண்டிருந்தாள்.

இங்ஙனமிருக்கச் சுவர்க்கத்தில் ஊர்வசியில்லாமையால் இந்திரன் துயருற்றான். ஆதலால் அவன் அவளை அழைத்துவரும்படி கந்தருவன் ஒருவனை ஏவினான். அக்கந்தருவன் ஒரு யுக்தி செய்தான். அஃதாவது, அவளுடைய இரண்டு ஆடுகளையும் கவர்ந்துகொண்டு சென்றான். தன் ஆடுகள் காணாமற்போன சங்கதி ஊர்வசியின் காதிற் கெட்டியது. அப்பொழுது அரசன் தவறிழைத்ததற்காக அவள் அவன்மீது கோபங்கொண்டு சுவர்க்கத்திற்குச் சென்றுவிட்டாள். புரூரவன் துக்கமிகுதியால் பயித்தியக்காரனைப்போல் திரிந்தலையலானான். இவ்வாறு திரிந்துகொண்டிருக்கையில், சரசுவதி என்னும் ஆற்றோரத்தில் அவன் அவளைக் கண்டான். அப்பொழுது அவன் கண்ணீர் வடித்துக்கொண்டு தனக்கு நேர்ந்த நிலைமையை அவளுக்குத் தெரிவிக்க, அவள் அவனிடம் கந்தருவனைப்

பிரார்த்திக்கும்படி கூறினுள். அரசன் அவ்வாறு செய்ய, கந்தருவர்கள் அவனுக்கு ஓர் அக்னி ஸ்தாலியைக் கொடுத்து, தினந்தோறும் அதைப் பூஜிக்கும்படி சொன்னுர்கள். அங்ஙனமே அரசன் பூஜை செய்யச் செய்ய, அவனுக்குப் பிடித்திருந்த ஊர்வசியைப்பற்றிய பயித்தியம் விலகி, அவன் மனம் மெல்ல மெல்ல ஈசுவர பக்தியில் ஈடுபட்டது. பின்னர், புரூரவன் தன் புண்ணிய வசத்தால் கந்தருவலோகத்தை அடைந்தான்.

---

22. ஜீவகாருண்ணியத்தின் சிறப்பு

முற்காலத்தில் பரத குலத்தில் இரந்திதேவன் என்னும் ஒரு மன்னன் இருந்தான். அவன் மிகவும் கீர்த்தி வாய்ந்தவன். எப்பொழுதும் களிகூர்ந்திருப்பான். எந்த விருந்தினர் வந்தாலும் தனக்கு வேண்டிய அளவு இருக்கிறதோ இல்லையோ என்பதை யோசிக்காமல், வீட்டில் இருப்பதையெல்லாம் எடுத்து அவர்களுக்குக் கொடுத்துவிடுவான். அதனுல் அவனுடைய குடும்பத்தினர் சிற்சில சமயங்களில் மிகவும் துன்பப்படவேண்டியதாயிருந்தது. ஒரு சமயம்

அவனும் அவன் குடும்பத்தினரும் அன்ன ஆகாரமின்றி, நாற்பத்தெட்டு நாட்கள் கழிக்கவேண்டியதாயிற்று. நாற்பத்தொன் பதாவது நாள் அவனுக்கு யாரோ நெய், பாயசம் அன்னம், தண்ணீர் முதலியவை களைக் கொண்டுவந்து கொடுத்தனர். எல் லோரும் களிப்புடன் அந்த அன்னத்தை அருந்திப் பசியைத் தணிக்கும் தருணத்தில் வாயிலில் ஒரு விருந்தாளி தோன்றியதைக் கண்டு இரந்திதேவனுக்கு மிகவும் மகிழ்ச்சி யுண்டாயிற்று. அவன் விருந்தினருக்குத் திருப்தியாகிறவரையில் புசிப்பதற்குக் கொடுத்து மிகுந்திருப்பதைப் புசிக்கப் போகும் சமயத்தில், வேறொரு யாசகன் வந்தான். இரந்திதேவன் எல்லோரையும் கடவுளின் மக்களாகக் கருதும் இயல்புடைய வனுதலால், அவனுக்கும் அன்னத்தைக் கொடுத்து உதவினான். அதற்குப் பிறகு மூன்றாவதாக ஒருவன் வந்தான். அவனு டன் சில நாய்களும் வந்தன. இரந்தி தேவனுக்கு அவனையும் அவனுடைய நாய் களையும் கண்டு இரக்கமுண்டாகி, மிகுந் திருந்த அன்னத்தை எல்லாம் அவனுக்குக் கொடுத்துவிட்டான். இவ்வாறாக அன்ன மெல்லாம் தீர்ந்துவிட்டது. தண்ணீர் மாத் திரம் இருந்தது. அதைக குடித்து ஆத் மாவைக் குளிரச்செய்யவேண்டுமென்று

நினைத்துக்கொண்டிருக்கும் போதே ஒரு சண்டாளன் வந்து, "எனக்கு மிகவும் தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கொடுப்பீர்களாகில் உங்களுக்கு மங்களமுண்டாகும்" என, இரந்திதேவன் மனமுருகி, இருந்த தண்ணீரைஎல்லாம் அவனுக்குக்கொடுத்து விட்டான். அதிதி (விருந்தினர்) கோலம் பூண்டு வந்த இம் மூவரும் அதிதிகளல்லர். தேவர்களே இரந்திதேவனைப் பரீட்சிக்கும் பொருட்டு வந்திருந்தனர். அவனுடைய நிகரற்ற ஜீவகாருண்ணியத்தைக் கண்டு அவர்கள் திகைத்து நின்றனர். பிறகு அவர்கள் தமது உண்மை வடிவந்தாங்கி, 'இரந்திதேவனே! நாங்கள் உன்னுடைய செயலைக் கண்டு மகிழ்ந்தோம். உனக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்" என்றனர். ஆனால் இரந்திதேவன் இச்சையற்றவனா யிருந்தான். அவன் தேவர்களை வணங்கினனேயன்றி ஒன்றும் கேட்கவில்லை. ஜீவகாருண்ணியம் நிறைந்த காரியங்களைச் செய்வதையே தன் கடமையெனக் கொள்ளுதலும், எக்காரியத்தையும் பயன் கருதிச் செய்யாமையும் அவனுடைய கொள்கைகளாகும்.

23. யாதவர்கள்

புருவின் வமிசத்தினர் பௌரவர்; குருவின் வமிசத்தினர் கௌரவர்; பாண்டுவின் வமிசத்தினர் பாண்டவர். அதுபோல எதுராஜனுடைய வமிசத்தினர் யாதவராவர். எது என்பவன் யயாதியின் புத்திரனுவான். யாதவ குலத்தில் பெருங்கீர்த்தியும் வீரமும் வாய்ந்த அரசர்கள் பலர் இருந்தனர். பெரும் பராக்கிரமசாலியான இராவணனைக் கூட அடக்கிய ஸஹஸ்ரார்ஜுனனும் இந்த யாதவர் வமிசத்தினன் தான். அவ்வாறே பலராமன், ஸ்ரீகிருஷ்ணன், அநிருத்தன் முதலிய வீர புருஷர்களும் இக்குலத்தைச் சேர்ந்தவர்களே. வீரம், வலிமை, உற்சாகம், புகழ், தரும சிந்தனை முதலிய நற்குணங்களில் மேன்மை பெற்று விளங்கிய இவ்வமிசம், ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பின்னர் தாழ்வு அடைந்து ஒழிந்ததைக் கேட்க உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். மதுபானம் முதலிய துர்வழக்கத்தைக் கைக்கொண்டு உன்மத்தராய், அற்ப காரணங்களுக்காகத் தம்மில் சண்டை செய்து சத்துருக்களைக் கொல்லும் அம்புகளினுல் உற்ருர் உறவினருடைய கழுத்தை அறுத்தவர்கள் நாசம் அடைந்த

தில் ஆச்சரியமென்ன இருக்கிறது? மூங்கிற் றீவில் மூங்கில்கள் ஒன்ருேடொன்று உராய்ந்து, அதனுல் தீப்பற்றிக்கொண்டு தீவு முழுவதும் எரிந்து சாம்பலாகிவிடுவது போல யாதவர்களும் ஆனுர்கள். இந்த யாதவர்களைப்பற்றிய கதைகளினின்றும் எவ்வளவோ நீதிகளைக் கற்கலாம். அவற்றைச் சிறுவர்கள் உணர்ந்து தமக்குள் சண்டை ஏற்படாமல் நடந்துகொள்ள வேண்டும்.

---

24. தேவகியும் கம்ஸனும்

யாதவ குலத்தில் சூரசேனன் என்ருெரு அரசன் இருந்தான். இவன் வடமதுரை என்னும் நகரத்தில் அரசாண்டுகொண்டிருந்தான். இவனுடைய மகனுகிய வசுதேவனுக்குக் கம்ஸனுடைய சகோதரி தேவகியை மணமகளாகக் கொடுத்து. மிகுந்த சிறப்புடன் திருமண விழா நடத்தப்பட்டது. விவாகம் முடிந்ததும் கம்ஸன் தன் சகோதரியையும், மைத்துனனையும் அழைத்துச் சென்று, புக்ககத்தில் விட்டுவரப் புறப்பட்டு, சகோதரியை மகிழ்விக்கும்பொருட்டுத்

தானே அவள் உட்கார்ந்திருந்த இரதத்தை ஓட்டினான். தங்கைபால் தமையன் கொண்டுள்ள அன்பைக் கண்டு ஜனங்களெல்லோரும் வியப்படைந்தார்கள். கம்ஸன் இரதத்தை ஓட்டிக்கொண்டுபோகும்போது, "மூர்க்கனான கம்ஸனே! எவளை நீ பெரும் வைபவத்துடன் புக்ககம் அழைத்துச் சென்றுவிடுகிறாயோ, அவளுடைய எட்டாவது மகனால் நீ மரணமடைவாய்" என்ற அசரீரிச் சொற்கள் அவன் காதில் வீழ்ந்தன. இதைச் செவியுற்றதும் கம்ஸனுக்குத் தன் சகோதரியின்மேலிருந்த பேரன்பு திடீரென்று மாறி, அவன் தன் உடைவாளை உருவிக்கொண்டு தேவகியைக் கொல்லத் தலைப்பட்டான். "இப்படி மூர்க்கமான செய்கையைச் செய்யாதே" என்று வசுதேவன் அவனுக்கு எவ்வளவு சொல்லியும் பயன்படவில்லை. கம்ஸன் இயற்கையிலேயே கொடூர குணமுள்ளவனாதலால் தன் பிடிவாதத்தை விடவில்லை. முடிவில், தேவகிக்குப் பிறக்கும் குழந்தைகளை எல்லாம் அவனுக்குக் கொடுத்துவிடுவதாக வசுதேவன் வாக்களித்தபிறகு கம்ஸன் அவளைக் கொல்லாமல் விட்டான்.

---

25. கம்ஸன் செய்த சிசு வதை

சில நாட்களுக்குப் பிறகு கம்ஸன் பின் வருமாறு எண்ணலாயினன்: "என்னவென்ருலும், புத்திரவாஞ்சை மிகவும் வலிவுடையது; தான் பெற்ற புத்திரனைக் கொல்லும் பொருட்டு யார்தான் குழந்தையைத் தன் கையால் கொடுப்பார்கள்? ஆதலால் வசுதேவன் தான் கொடுத்த வாக்கின்படி நடந்துகொள்வான் என்பது எப்படி நம்பக் கூடும்? ஆகையால் வசுதேவனையும் தேவகியையும் தன் பார்வைக்குள் சிறையில் அடைத்துவைப்பதுதான் நலம். ஆனல் இஃதெப்படி முடியும்? கம்ஸனுடைய தந்தையாகிய உக்கிரசேனன் அரசு புரிந்து கொண்டிருந்தான். அவன் உத்தரவின்றிக் கம்ஸன் ஒன்றுஞ் செய்வதற்கில்லை. இந்த இடையூறை விலக்கும்பொருட்டுக் கொடியவனன கம்ஸன் தன் தந்தையை முதலில் சிறையி லடைத்துவிட்டு, அரசாட்சியைத் தானே வகித்து, தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டான்.

வசுதேவனும் தேவகியும் சிறையிலிருக்கும்பொழுது அவர்களுக்கு முதற் புத்திரன் பிறந்தான். வசுதேவன், வாக்களித்தபடி தன் புத்திரனைக் கம்ஸனிடம் கொடுத்தான். இந்த முதற் குழந்தையால் தனக்கு அபாயம் ஒன்றுமில்லையாதலால் இவனைக்

கொல்லக்கூடாதென்கிற நல்லெண்ணம் கம்ஸன் மனத்தில் உதித்திருந்துங்கூட, அவன் இயற்கையாகவே கொடியவனும், சமுசயம் உடையவனுமாதலால் மனம் வெகு சிக்கிரத்தில் மாறப்பெற்று, குழந்தையைக் கொன்றுவிட்டான். இவ்வாறே பின்னும் ஐந்து சிசுக்களை முறையே கொன்றான். தேவகியின் ஏழாவது கர்ப்பம் அவள் உதரத்திலேயே மறைந்துவிட்டது. வசுதேவனுடைய மற்ற மனைவியர்களுள் ஒருத்தியாகிய உரோகிணி என்பவளும இதே சமயத்தில் கர்ப்பந் தரித்திருந்தாள். அவளுக்கு யாதொரு அபாயமும் நேரிடாமல் இருப்பதற்காக அவளை வசுதேவன் தனது நண்பனும், கோகுலத்திலுள்ள சகல இடையர்களுக்கும் தலைவனுமான நந்தன் வீட்டில் வைத்திருந்தான். அவ்விடத்தில் அவளுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்குப் பலராமன் என்று நாமகரணம் செய்யப்பட்டது.

26. சிசுக்களை மாற்றுதல்

தேவகியின் ஏழாவது கரு (கர்ப்பம்) உதரத்திலேயே காணுமற்போனபடியால் கம்ஸனுக்கு அதைப்பற்றிக் கவலை உண்டாகவில்லை. பிறகு எட்டாவது தடவை கர்ப்பந்தரித்த செய்தி கம்ஸன் காதிற்கு எட்டியதும், தனது சத்துரு பிறக்கப்போகிருன் என்று அவனுக்குத் தோன்றியபடியால், அவன் முன் எச்சரிக்கையுடன் காவல் புரிய ஏற்பாடு செய்திருந்தான்.

ஆவணி மாதம் கிருஷ்ண பட்சத்து அஷ்டமியன்று இரவு பன்னிரண்டு மணி நேரத்தில், வசுதேவனும் தேவகியும் சிறையில் இருக்கும்பொழுது, தேவகிக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் பிறந்தார். நடு இரவாயிருந்தபடியால் குழந்தை பிறந்தவுடனே கம்ஸன் அவ்விஷயத்தை அறிய முடியவில்லை. அச்சமயம் எங்கும் காரிருள் சூழ்ந்துகொண்டிருந்தது. குழந்தையைக் கொண்டு எப்படியாவது வெளியில்சென்று கோகுலத்திற்குப் போய் அங்குத் தனது நண்பனுன நந்தன் வீட்டில் வைத்துவிட்டு வந்தால், அது பிழைத்திருக்கும் என்று புத்திர வாஞ்சையினுல் வசுதேவனுக்குத் தோன்றியது. கடவுள் கிருபையினுல் அது அவன் நினைத்தவாறே நடந்தேறியது, காவலாளர்கள் நன்ருக உறங்கிக்கொண்டி

ருக்கும் தருணம் பார்த்து வசுதேவன் ஸ்ரீகிருஷ்ணனை நன்ருகத் துணியில் சுற்றிக் கொண்டு மெல்ல, தந்திரமாய்ச் சிறையிலிருந்து வெளிப்பட்டு யமுனு நதியைக் கடந்து கோகுலத்தில் நந்தன் வீட்டை அடைந்தான். அதே தினத்தில் நந்தனுடைய மனைவி பிரசவித்துப் பெண் குழந்தையைப் பெற்றிருந்தாள். இக்குழந்தை யோகமாயையின் அவதாரமென்றும், அதற்கு மரணமில்லையென்றும் வசுதேவனுக்குத் தெரியும். ஆதலால், அவன் ஸ்ரீகிருஷ்ணனை யசோதையின் முன்னிலையில் வைத்துவிட்டு, அங்கிருந்த அவளுடைய பெண் குழந்தையைப் பிறர் அறியாமல் தூக்கிக் கொண்டு, பொழுது விடிவதற்கு முன் கம்ஸன் வீட்டை அடைந்து ஓசைப்படாமல் சிறைச் சாலையில் வந்து அமர்ந்தான். யசோதை பிரசவமான சிரமத்தால் மூர்ச்சை அடைந்திருந்தாள். அதனுல் தனக்குப் பெண் குழந்தை பிறந்ததோ அல்லது ஆண் குழந்தை பிறந்ததோவென்று அவள் அறியாள். மறுநாட் காலையில் அவள் மூர்ச்சை தெளிந்து பார்த்தபொழுது குழந்தையான கிருஷ்ணனைக் கண்டு தனக்குப் புத்திரன் பிறந்தானென்றெண்ணி மிகவும் ஆனந்தமடைந்தாள்.

தேவகிக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறதென்று மறுநாள் காலையில் கம்ஸ

னுக்குத் தெரியவந்ததும், அவன் ஓடிவந்து அக் குழந்தையைக் கொல்ல முயன்ருன். அப்பொழுது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அக்குழந்தை அவன் கையினின்றும் நழுவி ஆகாயத்தில் பறந்து மறைந்து விட்டது. போகும்போது அது, "மூர்க்கனே! என்னைக் கொன்றிருந்தால் உனக்கு என்ன கிடைத்திருக்கும்? உன் பகைவன் பிறந்து சுகமாய் வளர்ந்துகொண்டிருக்கிருன். நீ வீணை அன்னியர் குழந்தைகளைக் கொல்லாதே" என்றது. அவ் வார்த்தைகளைச் செவியுற்றதும், கம்ஸனுக்குத் தான் இது வரையில் தன் சகோதரியைத் துன்புறுத்தியதற்காக மிகவும் பச்சாத்தாபம் உண்டாயிற்று. ஏனென்ருல், இவ்வளவு பாடுபடுத்தியும் பயன்படாமற்போயிற்றல்லவா?

பின்னர் கம்சனுக்குத் தன் பகைவனை 'எப்படிக் கண்டுபிடிப்பதென்கிற கவலையுண்டாயிற்று. "நம் நாட்டிலுள்ள சிசுக்களையெல்லாம் கொன்றுவிட்டால், அதில் சத்துருவும் கொல்லப்படுவான்" என்று மந்திரிமார்கள் சொல்ல, கம்சன் அவ்வாறே செய்யும்படி கட்டளையிட்டான்.

27. ஸ்ரீ கிருஷ்ணனுடைய பால லீலைகள்

கம்ஸன் தன் நாட்டிலுள்ள குழந்தைகளையெல்லாம் கொல்லும்பொருட்டு முதலில் பூதனை என்னும் அரக்கியை அனுப்பியிருந்தான். அவள் நாடு நகரங்கள்தோறும் போய்க் குழந்தைகளை நாசம் பண்ணிக் கொண்டே கோகுலத்திற்கு வந்து சேர்ந்தாள். அச்சமயத்தில் நந்தன் ஏதோ வேலையின்பொருட்டு வெளியில் சென்றிருந்தான். அரக்கியானவள் அழகிய பெண் உருவத்தைப் பூண்டு யசோதையினிடம் போய் இனிமையாகப் பேசலானாள்; பிறகு அவள் ஸ்ரீ கிருஷ்ணனை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு பால் கொடுக்க ஆரம்பித்தாள். அப்பால் நச்சுத் தன்மையுடையது. ஸ்ரீகிருஷ்ணன் விஷ்ணுவின் அவதாரமாதலால் அவனுக்கு அந்த அரக்கியின் கபடம் தெரிந்திருந்தது. மேலும், பகவானை விஷம் எப்படிப் பாதிக்கும்? கிருஷ்ணன் அவள் உடம்பிலிருந்த விஷத்தைமட்டுமல்ல, இரத்தத்தையும் உறிஞ்சிக் குடித்து அவளைக் கொன்றுவிட்டான்.

ஒரு நாள் யசோதை அவனுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, அங்கி முதலியன போட்டு, தாலாட்டுகள் பாடிக் கொண்டு, தயிர் பால் முதலியன வைத்திருக்கும் உறிகளுக்குச் சமீபத்தில் கட்டியிருந்த தொட்டிலில் படுக்கவைத்துவிட்டுத்

தன் வேலையை நாடிச் சென்றாள். ஸ்ரீ கிருஷ்ணன் நித்திரையிலிருந்து எழுந்ததும் தன கால்களால் உறிகளின் மேலிருந்த பால் தயிரையெல்லாம் உதைத்துக் கீழே தள்ளி விட்டான்.

ஒரு சமயம் யசோதை அவனை மடியில் வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அவனுடைய உடல் திடீரென்று ஒரு மலையைப் போல் கனக்க ஆரம்பித்தது.

ஸ்ரீ கிருஷ்ணன் புரிந்த பல அற்புதச் செயல்களைக் கேட்ட கம்ஸன் அவனைக் கொல்லும்பொருட்டுத் திருணவர்த்தன் என்னும் அரக்கனை அனுப்பினான். அவன் சுழற்காற்றாக வந்து கிருஷ்ணனைத் தூக்கிக் கொண்டு போகும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் அவன் கழுத்தை இருகப் பிடித்துக் கொன்றுவிட்டான்.

ஒரு சமயம் ஸ்ரீ கிருஷ்ணன் மண்ணை எடுத்துத் தின்பதை யசோதை கண்டாள். அவள் அவனை அதட்டி, வாயைத் திறந்து காட்ட ஏவினாள், அவன் வாயைத் திறந்ததும், அதனுள் பூமி, வானம், சூரிய சந்திரர்கள் முதலிய சகல புவனங்களையும் யசோதை கண்டு, ஆச்சரியமுற்றாள்.

ஸ்ரீ கிருஷ்ணன் அயலிலிருக்கும் இடையர்களின் வீட்டிற்குச் சென்று, அவர்கள் பால் கறப்பதற்கு முன்னே கன்றுகளை

அவிழ்த்துவிடுவான்; பயமே இல்லாமல் வீடுகளில் புகுந்து பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை எடுத்துத் தானும் தின்று, தோழர்களுக்கும் கொடுப்பான். தூங்கிக் கொண்டிருக்கும் சிசுக்களைக் கிள்ளி அழுகை மூட்டி வேடிக்கை பார்ப்பான். இவ்வாறு பலவிதமாகக் குறும்புகள் செய்வான். அவனுடைய குறும்புத்தனம் பொறுக்கமுடியாமல் ஒரு தடவை யசோதை



அவனைக் கயிற்றால் உரலில் கட்டி வைத்தாள். அவன் அந்த உரலுடன் மெல்ல மெல்ல நகர்ந்து இரண்டு மரங்களுக்கு நடுவில் புகுந்து சென்றான். உரல் நடுவில் அகப்பட்டுக் கொள்ளவே, அந்த மரங்கள் இரண்டும் வேரொடு பெயர்ந்து வீழ்ந்தன.

உரோகிணியின் மகனாகிய பலராமன் கிருஷ்ணனைவிடச் சற்றுப் பெரியவன். அவ்விருவரும் ஒரே இடத்தில் வளர்ந்து கொண்டிருந்தனர். சின்னாட்களில் நந்தன் முதலிய இடையர்கள் கோகுலத்தைவிட்டுப் பிருந்தாவனத்திற் கேகினர். அவ்விடத்தில்

யமுனை நதி ஓரமும், கோவர்த்தன பருவதமும் இவர்களுக்கு விளையாட நல்ல இடமாக அமைந்தன. அதைக் கண்டு பலராமன், கிருஷ்ணன், அவர்களுடைய தோழர்கள் எல்லோருக்கும் மிகுந்த ஆனந்த முண்டாயிற்று.

பலராமனும் கிருஷ்ணனும் மாடுகளை மேய்ப்பதற்குரிய பருவம் எய்தினர். அப்பொழுது அவர்கள் புல்லாங்குழல், கொம்பு முதலிய வாத்தியங்களையும், பந்து, கோல் முதலிய விளையாட்டுக் கருவிகளையுங் கொண்டு காட்டிற்குச் செல்வது வழக்கம்.



ஒரு நாள் அவர்கள் கானகஞ் சென்றிருக்கும பொழுது ஓர் அரக்கன கன்றின் வேடத்தைப் பூண்டு அவர்களுடைய மாட்டு மந்தையில் புகுந்தான். அதைக் கிருஷ்ணன் இராமனுக்குக் குறிப்பால் தெரிவிக்க, உடனே அவன் அந்த அரக்கனின் கால்களைப் பிடித்துக் கிறுகிறுவென்று சுற்றி ஒரு விளாமரத்தின்மீது எறிந்தான்.

ஒரு சமயம் பசுக்களுக்குத் தண்ணீர் காட்டும்பொருட்டு எல்லோரும் யமுனைக்குப்

போயிருந்தனர். அவ்விடத்தில் ஒரு இராட்சதன் கொக்கின் வேடம் பூண்டு உட்கார்ந்திருந்தான். அவன் குறும்பு செய்ததற்காக ஸ்ரீ கிருஷ்ணன் அவனுடைய அலகின் இரு பாகங்களையும் பிடித்துக் குறுக்கே கிழித்து எறிந்துவிட்டான்.

பலராமனும் கிருஷ்ணனும் மற்றுமுள்ள கோபாலர்களும் (இடைப் பையன்கள்) சேர்ந்து பசுக்களை மேய்க்கக் கானகத்திற்குச் செல்லும்பொழுது, கட்டுச்சாதம் கட்டிக்கொண்டுபோவர். மத்தியானத்தில் யமுனை நதிக்கரையில் வேடிக்கையாய்த் திரிந்து அலைந்துகொண்டுப், ஒருவரை யொருவர் பரிகாசஞ் செய்துகொண்டும், ஒருவருக்கொருவர் சாதத்தை ஊட்டிப் புசித்துக்கொண்டும், சற்றுநேரம் புல்லாங்குழல் கொம்பு முதலியன ஊதியும், அத்துடன் நடனம் செய்தும் கொஞ்ச நேரம் ஓடி விளையாடியும், மரங்களின்மீது உட்கார்ந்திருக்கும் குரங்குகளுடைய வால்களைப் பிடித்து இழுத்தும், அவைகளுடன் சேட்டை செய்தும், பின்னும் சில சமயங்களில் அவ்விடத்திலிருக்கும் பறவைகளைப்போல் கூவியும் பொழுதைப் போக்குவார்கள். ஒரு சமயம் இவ்வாறு அவர்கள் விளையாடிக்கொண்டிருந்தபொழுது அகன் என்னும் ஓர் அரக்கன் மலைப்பாம்பின் உருவமாக வாயைப் பிளந்துகொண்டு படுத்திருந்தான் அவன்

வாயினுள் சிலர் தெரியாமல் புகுந்துவிட்டார்கள். கிருஷ்ணனும் அவர்கள் பின் சென்ருன். சென்றதும், அந்த அரக்கன் வாயை மூடிக்கொண்டான். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தீவிரமாய் வளரத் தொடங்கினுன். அதனுல் அரக்கனுக்கு வாயை மூட முடியவில்லை. பிறகு களைப்படைந்து அரக்கன் இறந்ததும், கோபாலர்கள் எல்லோரும் வெளியில் வந்தார்கள்.

இவ்வாருக இராமனும் கிருஷ்ணனும் பல தடவைகளில் இராட்சதர்களைக் கொன்று, தமது நண்பர்களை இரட்சித்துத் தமது பராக்கிரமத்தால் சகலரையும் வியப்படையச் செய்தனர்.

---

28. ஸ்ரீ கிருஷ்ணன் காளீயன் என்னும் நாகத்தை அடக்கியது.

ஒரு நாள் ஸ்ரீ கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் பசுக்களை மேய்த்துக்கொண்டிருக்கும்பொழுது கோபாலர்கள் எல்லோரும் தாகத்தினுல் ஸ்ரீகிருஷ்ணனை எதிர்பாரமலே தண்ணீர் குடிக்கும்பொருட்டு யமுனைக்குச் சென்ருர்கள். அவ்விடத்தில் மடுவில் காளீயன் என்னும் ஒரு கொடிய நாகம் வசித்துக் கொண்டிருந்தது. அதன் விஷத்தினுல் மடுவிலுள்ள தண்ணீர் நச்சுத்தன்மை அடைந்திருந்தது. என்ருலும், தாகத்தை அடக்கமுடியாததால் கோபாலர்கள்

அதைக் குடித்துவிட்டு, நஞ்சின் கொடுமை யால் மரணமடைந்தார்கள். அதற்குள் ஸ்ரீகிருஷ்ணன் அவ்விடம் வந்து எல்லோ ரையும் உயிர்ப்பித்தான். பிறகு அந்த நாகத்தை மடுவினின்றும் துரத்திவிட வேண்டுமென்று எண்ணி ஸ்ரீகிருஷ்ணன் அருகிலிருந்த ஒரு புன்னை மரத்தின் மேலேறி மடுவில் குதித்தான். அப்பொழுது நீர்க்கலக்கத்தினுல் பெருஞ் சத்தம் உண்டாயிற்று. அதைக் கேட்டுக் காளீய சர்ப்பம் கோபத்துடன் வெளியே வந்து ஸ்ரீ கிருஷ்ணனை இறுகச் சுற்றிக்கொண்டு அவனைக் கடிக்க முயன்றது. அதைக் கண்டு ஸ்ரீகிருஷ்ணனுடைய தோழர்கள் பயந்து நடுங்கி ஓவென்றலறினர். பசுக்களும் கதறலாயின. ஸ்ரீ கிருஷ்ணன்



வருவதற்கு நேர மாயிற்றென்று நந்தனும் யசோ தையும் கவலைப் பட்டுக்கொண்டி ருந்தார்கள். வெகு நேரம் ஆகியும் ஸ்ரீ கிருஷ்ண னுவது அவன் தோழராவது வந் திலர். அப்பொழுது சகல இடையர்களும்


அவர்களைத் தேடிக்கொண்டு மடுவினருகில் வந்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு நேரிட்ட ஆபத்தைக் கண்டு பயந்து நடுங்கலாயினர். ஸ்ரீ கிருஷ்ணனோ மெல்ல மெல்லத் தன் தேகத்தை உப்பும்படி செய்தான் கடைசியில் அது மிகவும் பெரிதாகியதால் சர்ப்பம் வேதனை பொறுக்கமாட்டாமல் ஸ்ரீ கிருஷ்ணனைச் சுற்றியிருந்த தன் உடற்கயிற்றை அவிழ்த்து விட்டது. ஆனால் அது ஸ்ரீ கிருஷ்ணனை அழித்துவிடத் தருணம் பார்த்துக்கொண்டேயிருந்தது. ஸ்ரீ கிருஷ்ணனும் அதன்மேல் ஏறிக்கொள்ளத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தான். முடிவில் ஸ்ரீ கிருஷ்ணனே ஜயித்தான். அவன் காளீயனின் தலையில் ஏறி நடனஞ்செய்து கொண்டே குதிகால்களால் அதன் படத்தை நசுக்கிவிட்டான். நாகம் பலவீனப்பட்டதைக் கண்ட கிருஷ்ணன் அதன் மதம் அடங்கியது என்று அறிந்து, அதை அந்த மடுவை விட்டு வேறிடம் செல்லும்படி கட்டளையிட அஃது அவ்வாறே சென்றது,

---

29. மலையைக் குடையாகப் பிடித்தது.

முற்காலத்தில் ஓராண்டு தொடர்ச்சியாக மழை பெய்யாமற்போனால் மழைக்கு அதிபதியாகிய இந்திரனை மகிழ்விக்கும் பொருட்டு வேள்வி நிகழ்த்துவது வழக்கம்.

அவ்வழக்கப்படி நந்தன் முதலிய இடையர்கள் யாகம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய நேர்ந்தது. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன், "இந்திரனுக்கும் உங்கட்கும் சம்பந்தமென்ன? கோவர்த்தன பருவதத்திற்கும் உங்கட்கும் நித்திய சம்பந்தம் இருப்பதால் அதற்கே பூஜை படைப்பது நலம்" என்று சொல்ல, நந்தனுக்கும் அதுவே மேலானதென்று தோன்றியது. இதனால் இந்திரனுக்கு தன்னை அவமானம் செய்ததாகத் தோன்றியது. அவன் மிக்க கோபங்கொண்டு மழை பொழியும்படி மேகங்களை ஏவிவிட அவைகள் கோகுலத்தில் பயங்கரமான மழையைப் பொழியலாயின. இடிமுழக்கமும் பெருமாரியும் உண்டாயின.



எங்கும் உடைப்புகள் ஏற்பட்டு தண்ணீர் மயமாகி விட்டது. மக்களுக்கு நிற்கக் கூட இடம் கிடைக்கவில்லை. எல்லோரும் குளிரால் நடுக்கமுற்றனர். அவர்களுக்கு என்ன செய்வதென்று புலப்படவில்லை. அது தருணம் இந்திரனுடைய கர்வத்தை

அடக்கும்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தன மலையைப் பிடுங்கித் தன் கைச் சிறு விரலால் ஏந்திக்கொள்ள, குடையின் அடியில் நிற்பதுபோல எல்லா இடையர்களும் மாடு கன்றுகளுடன் அந்தப் பருவதத்தின்கீழ் வந்து நிற்கலாயினர். ஸ்ரீ கிருஷ்ணன் ஏழு நாட்கள் வரையில் அந்தப் பருவதத்தை ஏந்திக்கொண்டு நின்றனன்; அதைக் கண்டு இந்திரனுடைய கர்வம் அடங்கியது. மழைவிட்டு வெளிச்சமுண்டாகி ஆறு குளங்களில் நீர் வற்றி, தரை கொஞ்சம் உலர்ந்தது. பிறகு எல்லோரும் கோகுலத்திற்குத் திரும்பினர்.

---

30. அக்ரூரர் தூது

ஸ்ரீ கிருஷ்ணன் அற்புதமான செயல்களைப் புரிந்து அநேக இராட்சதர்களை வதைத்த விவரம் வெகுதூரம் பரவியதுமல்லாமல் கம்ஸன் காதிற்கும் எட்டியது. இவ்வளவு பராக்கிரமசாலியான ஸ்ரீ கிருஷ்ணன் தேவகியின் எட்டாவது புதல்வனென்றும், தனது பகைவனென்றும் கம்ஸன் அதுவரை உணரவில்லை. கலகப்பிரியராகிய நாரதர் இப்பொழுது வேண்டுமென்றே கம்ஸனிடம் சென்று, ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்தது முதல் நடந்த சகல விஷயங்களையுமம அவனிடம் உரைத்தார்.

"கோகுலத்தில் நந்தன் என்று வசுதேவனுக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவன் வீட்டில் பலராமன், கிருஷ்ணன் என்று இரண்டு வாலிபர்கள் இருக்கின்றனர். அவ்விருவரும் வசுதேவனுடைய புதல்வர்கள்" என்று அவர் சொன்னதைக் கேட்டதும் கம்ஸனுக்கு அடங்காக் கோபமுண்டாகி, வசுதேவன் தன்னை ஏமாற்றிவிட்டதனால் அவனைக் கொல்லும்பொருட்டுப் புறப்பட்டான். நாரதர் அவனைத் தடுத்து நற்புத்தி புகட்டியதன்மேல் வசுதேவனைக் கொல்லாமல் தேவகியுடன் அவனைச் சிறையில் அடைத்தான்.

வசுதேவனுடைய புத்திரர்களான பலராமனையும், கிருஷ்ணனையும் கொல்வதற்குக் கம்ஸன் இப்பொழுது பல உபாயங்களைத் தேடலானான். இந்தக் காரியத்தைச் செய்ய அவன் கேசி என்னும் அசுரனை நியமித்தான். மேலும், அவர்களை யுத்தத்தில் வெல்லும்பொருட்டு முஷ்டிகன், சாணூரன் என்ற இரண்டு அரக்கர்களிடமும் சொல்லிவைத்தான்.

யானையின் காலால் இடறச்செய்து கொல்லும்படி குவலயாபீடம் என்னும் பெயருடைய மதயானையைச் சித்தமாய் வைத்திருந்தான்.

தனுர் யாகத்தின் நிமித்தமாய் அவர்களைத் தந்திரமாய் அழைத்துவரும் பொருட்டு அக்ரூரரிடம் செய்தி சொல்லி, அவரைக் கோகுலத்திற்கு அனுப்பினன். அக்ரூரர் இயற்கையாய் மிகவும் நல்லவர். ஆனல் மன்னனுடைய கட்டளையை மீற அஞ்சி அவர் கோகுலத்திற்குச் சென்ருர். அன்று ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் செய்ய வேண்டுமென்ற அவா அவருக்கு மேலிட்டிருந்தது. கோகுலத்தில் நந்தன் அவரைத் தக்கபடி உபசரித்தான். அக்ரூரர் நந்தனிடத்தில் அரசன் உத்தரவை மாத்திரம் சொன்னர்; கிருஷ்ணனிடத்தில் அரசனது கொலுவில் நடந்த சகல சங்கதிகளையும், இராம கிருஷ்ணர்களைக் கொல்வதற்காகச் செய்திருக்கும் தந்திரங்களையும் ஆதியோடந்தமாய்ச் சொன்னர். அரசன் கட்டளைப்படி நந்தன் புத்திரர்களை அழைத்துக் கொண்டு, அரசனுக்குக் கொடுக்கக் காணிக்கையும் எடுத்துக்கொண்டு மதுரைக்குப் போகப் புறப்பட்டான்.

---

31. இராம கிருஷ்ணர்களுடைய பராக்கிரமம்

எல்லோரும் மதுரையை அடைந்தனர். கோகுலத்திலிருந்து வந்த இடையர்கள் அனைவரும் நகரத்திற்கு வெளியே இறங்கினர்கள். இவர்களை அழைத்துக்கொண்டு வந்திருப்பதைக் கம்ஸனுக்குச் சொல்லும் பொருட்டு அக்ரூரர் மாத்திரம் முதலில் சென்றார். இராமனும் கிருஷ்ணனும் நகரத்தைச் சுற்றிப்பார்ப்பதற்காக வெளியில் புறப்பட்டனர். ஸ்ரீ கிருஷ்ணனுடைய கீர்த்தி ஏற்கனவே மதுரை முழுவதும் பரவியிருந்தது. ஆதலால் அவரைப் பார்க்கும் பொருட்டு ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வாசல் திண்ணைகள்தோறும் நின்றுகொண்டிருந்தனர். இராமனும் கிருஷ்ணனும் வேடிக்கை பார்த்துக்கொண்டே தெருவில் போனர்கள். அப்பொழுது அரசனுடைய வண்ணான் எதிரில் வரக் கண்டு, "உன் மூட்டையிலிருக்கும் ஆடைகளை எனக்குக் கொடு" என்று கிருஷ்ணன் அவனைக் கேட்டார். வண்ணான் அவர்களை அகங்காரத்துடன் நோக்கி, "காட்டு மனிதர்களே, இவை மன்னனுடைய உடைகள். அவற்றை நீங்கள் கேட்கிறீர்கள். இப்பொழுது உங்களுக்கு என்ன சொல்வது? ஐய, முழு மூடர்களே!" என்றான். அதைக் கேட்டுக் கிருஷ்ணன் கோபத்துடன் அவன் கன்னத்

தில் ஓங்கி ஓர் அறை அறைய, வண்ணான் செத்துக் கீழே விழுந்தான். பிறகு இராம கிருஷ்ணர் அவன் மூட்டையிலிருந்து தமக்குத் தேவையான வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு சென்றார்கள். சிறிது தூரம் சென்றபிறகு ஒரு சேணியன் தான் நெய்த துணிகளை அன்புடன் அவர்களுக் களித்தான். அவற்றை அவர்கள் மகிழ் வுடன் பெற்றுக்கொண்டார்கள். சுதர்மன் என்னும் ஒரு தோட்டக்காரன் அவர்களைப் பூஜிக்க, அதையும் ஏற்றுக்கொண்டனர். அச்சமயத்தில் குப்ஜா என்னும் பெய ருடைய கம்ஸனின் தாசியொருத்தி சந்தனத்தை அரைத்து எடுத்துக்கொண்டு அரண்மனையை நோககிச் சென்றுகொண் டிருந்தனள். இவளுடைய சரீரம் மூன்றி டத்தில் கோணலாக இருந்தது. இவள் இராம கிருஷ்ணரைக் கண்ணுற்றதும் இச் சந்தனத்தைப் பூசிக்கொள்ள இப் புருஷர் கள் தாம் ஏற்றவர்கள் என்றெண்ணி, அதை அவர்களுக்குப் பூசினாள். ஸ்ரீ கிருஷ்ணன் தம் கால்களால் அவள் உடற்கோணல்களை நிமிர்த்தார்.

இவ்விதமாக மக்களுக்கு அற்புதக் காட்சி யளித்துக்கொண்டு அவ்விரு சகோ தரர்களும் கம்ஸனுடைய யாகசாலைக்குச் சென்றனர். அந்த யாகசாலையில் இந்திர னுடைய வில் வைக்கப் பட்டிருந்தது.

அதைக் காவலாளர்கள் பாதுகாத்துக் கொண்டிருந்தனர். ஸ்ரீகிருஷ்ணன் அவர் களைப் பொருட்படுத்தாமல் வில்லை எடுத்து ஒடித்து விட்டுத் தம்மைத் தடுக்கவந்த காவற்காரனைக் கொன்றுவிட்டார். இச் செய்தியைக் கம்ஸன் செவியுற்றதும் அவர் களைப் பிடித்துவர ஒரு சேனையை அனுப் பினன். அச்சேனையையும் இவ்விருவரும் நாசஞ் செய்தனர். அதைக் கண்டு மதுரா புரியிலுள்ள ஜனங்கள் திகைத்தனர். கம்ஸ னுக்கோ பயத்தினல் உறக்கமே வரவில்லை. அவன் பயங்கரமான கனவுகள் காண லானுன். இரவை அவன் ஒருவாறு கழித்து விட்டு மறுநாள் காலையில் பயில்வான்களை வரவழைத்து மல்யுத்தம் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். அதைப் பார்க்க நந்தன் முதலிய இடையர்களையும் அழைத் திருந்தான். அரசனுக்குக் கொடுக்கும் பொருட்டுக் கொண்டுவந்திருந்த காணிக் கைகளை எல்லாம் அவன் முன்னிலையில் வைத்துவிட்டு அவர்களெல்லோரும் தத்தம் ஆசனங்களில் போய் உட்கார்ந்து கொண் டனர். சற்று நேரத்திற்குள் இராமனும் கிருஷ்ணனும் மண்டபத்தின் வாயிலில் வந் தனர். குவலயாபீடம் என்னும் யானை அவ் விடத்தில் நின்றுகொண்டிருந்தது. அவ் விருவரைக் கண்டதும் யானைப் பாகன் அதை அவர்கள் மேற் பாயும்படி செய்


தான். ஸ்ரீகிருஷ்ணன் முன்வந்து அதனோடு போராடி, அதன் வாலைப் பிடித்துச் சித்திர வதை செய்து முடிவில் அந்த யானையைப் பாகனுடன் கொன்றுவிட்டார். யானையைக் கொன்ற செய்தி உடனே கம்ஸன் காதிற் கெட்டியது. அதற்குள் இராம கிருஷ்ணர் கள் பிடுங்கி எடுத்த யானையின் தந்தங்களை வாளைப்போல் தோளில் சாற்றிக் கொண்டு இரத்தத்தினால் நனைந்த உடுப்புகளுடன் மண்டபத்தில் தோன்றினர். அவர்களைச் சிலர் பயத்துடனும், சிலர் அன்புடனும், சிலர் மகிழ்ச்சியுடனும், மற்றும் சிலர் ஆச்ச ரியத்துடனும் பார்க்கலானார்கள். உட்சென் றதும் முஷ்டிகனும், சாணூரனும் இவர்களை மல்யுத்தம் செய்யக் கூப்பிட, இருவரும் போர்க்களத்தில் இறங்கி, கிருஷ்ணன் சாணூரனுடனும், பலராமன் முஷ்டிகனு டனுமாக மல்யுத்தம் புரியலாயினர். யார் எவரைக் கொல்லுகிறாரென்று சபையோர் கள் எல்லோரும் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தனர். முடிவில் இராம கிருஷ்ணர் இருவரும் பயில் வான்களைக் கொன்றனர். அதைக் கண்டு இதர மல்யுத்தக்காரர்களும் அவர்களருகில் ஓடிச் செல்ல அவர்களும் அதே கதியை யடைந்தனர். இவற்றையெல்லாம் கண் ணுற்ற கம்ஸன் பயந்து, “இந்த அதிகப் பிரசங்கிகளை வெளியில் வெருட்டிவிட்டு நம்

சத்துருவான நந்தனைச் சிறைப்படுத்தி, வசுதேவனுடையவும், தன் பிதாவாகிய உக்கிரசேனனுடையவும் சிரங்களை வெட்டி விடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

---

32. கம்ஸ வதம்

கம்ஸன் இட்ட இந்தக் கட்டளையைக் கேட்டுக் கிருஷ்ணனுக்கு அடங்காத கோப முண்டாகி, இத்தகைய பொல்லாத மன்னன் தமது மாமனாயிருந்தபோதிலும், முன் பின் பாராது அவனைக் கொன்றுவிடுவது தான் நலமென்று கருதி, அவர் உடனே



கம்ஸனுடைய சிம்மாசனத்தின் மீது தாவிக் குதித்தார். கம்ஸன் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு வாளை உருவிக் கிருஷ்ணனைக் கொல்ல முயன்றான். கிருஷ்ணன் அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளி, கிரீடத்தைக் கீழே வீழ்த்தி, அவனுடைய குடுமியைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக்கொண்டு வந்து ஒரு நிமிஷத்தில் அவனைக் கொன்றுவிட்டார்.

கம்ஸனைக் கொன்றதும் நகரத்திலெங்கும் ஜனங்கள் அமர்க்களம் செய்யலானார்கள். கம்ஸனுக்கு எட்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பழிவாங்கும் நிமித்தம் கிருஷ்ணனை நோக்கி ஓடி வர, கிருஷ்ணன் அவர்களையும் கொன்றுவிட்டார்.

பிறகு இராம கிருஷ்ணர்கள் இருவரும் தம் பெற்றோர்களைச் சிறையிலிருந்து விடுவித்து, அவர்கள் தாள்களில் விழுந்து வணங்கினர். இவ்வளவு சிறு வயதில் தம் புதல்வர்களின் பாரக்கிரமத்தைக் கண்டு பெற்றோர்கள் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தனர்.

அவர்களின் நல்லாசியைப் பெற்றபிறகு இராமகிருஷ்ணர்கள் இருவரும் தமதுபாட்டனாகிய உக்கிரசேனனிடம் சென்றனர்,

கம்ஸன் அவரை மிகவும் துன்புறுத்தியிருந்தான். கிருஷ்ணன் மறுபடியும் இராஜ்ஜியத்தை அவருக்குக் கொடுத்து, கம்ஸனுடைய பயத்தினால் ஓடிப்போயிருந்த யாதவர்களை மறுபடியும் அழைத்து, அவர்களை நிர்ப்பயமாய் மதுரையில் வசிக்கும்படி செய்தார். மதுராபுரியில் அமைதி உண்டாகிற வரையில் தாம் சில நாள் தங்கியிருந்து பின்னர் கோகுலம் வருவதாகச் சொல்லி இராம கிருஷ்ணர் நந்தனையும் இதர இடையர்களையும் உத்தரவு கொடுத்தனுப்பினார்கள்.

33. குரு தட்சிணை

பிறகு வசுதேவன் தன் குலகுருவாகிய கர்க்காசாரியரைக்கொண்டு இராம கிருஷ்ணர்களுக்கு உபநயனம் செய்வித்து, வித்தை கற்கும்பொருட்டு அவர்களைச் சாந்தீபினி முனிவரிடம் அனுப்பினுர். அவரது ஆசிரமத்தில் அவ்விருவரும் மிகவும் சிறப்பாக குருசேவைசெய்து வேதம், உபநிடதம், சாஸ்திரம் முதலியன கற்று முடிந்த பிறகு, தமக்குரிய குரு தட்சிணையைக் கேட்கும்படி சாந்தீபினியை வேண்டிஞர்கள். அதற்கு அவர், "பிரபாஸம் என்னும் க்ஷேத்திரத்தில் என் புதல்வன் கடலில் மூழ்கிக் கிடக்கிருன். அவனைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்" என்று சொல்ல, அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டு, இருவரும் பிரபாஸ க்ஷேத்திரத்திற்குச் சென்று, சமுத்திர ராஜனை நோக்கி, "நீ எங்கள் குருவின் குமாரனை அலைகளுடன் கொண்டுவந்திருக்கிருய். அவனைத் திருப்பிக் கொடு" என்று கேட்டனர். அதற்குச் சமுத்திர ராஜன், "அவனை நான் கொண்டுவரவில்லை. என்னுடைய ஜலத்திற்குள் சங்கத்தின் உருவங்கொண்ட ஓர் அசுரன் இருக்கிருன். அவன்தான் குரு புத்திரனைக் கொண்டுவந்திருக்கிருன்" என்று

சொல்ல, ஸ்ரீ கிருஷ்ணன் ஜலத்திற்குட் சென்று, அசுரனைக் கொன்று, அவன் வயிற்றைக் கிழித்தார். ஆனால் குருவின் புதல்வன் கிடைக்கவில்லை. அப்பொழுது அந்த அசுரனுடைய உடம்பிலிருந்து உற்பத்தியான சங்கைக் கொண்டு எமனிடஞ் சென்று அவனிடத்திலிருந்து குருபுத்திரனை விடுவித்துக்கொண்டு, அவனைச் சாந்தீபினி குரு வசம் ஒப்புவித்தார். புத்திரன் திரும்பி வந்ததைக் கண்டு குரு மிகவும் மகிழ்வுற்று, அவ்விரு சீடர்களையும் நன்கு ஆசீர்வதித்து உத்தரவு கொடுக்க, அவ்விருவரும் மதுரைக்குத் திரும்பிவந்தார்கள்.

---

34. துவாரகை நகரம்

கம்ஸனை ஸ்ரீ கிருஷ்ணன் கொன்றுரென்ற செய்தியைக் கேட்டதும், அவனுடைய மாமனும், மகத தேசத்து அரசனுமாகிய ஜராஸந்தன் பெருஞ் சேனைகளுடன் வந்து மதுரையை முற்றுகையிட்டதனால், ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனும் அவனுடன் போர்புரிந்தனர். பலராமன் அவனைச் சிறைப்படுத்திக்கொண்டுவர, ஸ்ரீ கிருஷ்ணன் அவனை மன்னித்துவிட்டார். அவன் வெட்கமடைந்து திரும்பிப் போய், மறுபடியும் பதினேழு தடவை யுத்தத்திற்கு வந்து, ஒவ்வொரு தடவையும் தோல்வி

யுற்ருன். சிறிதுகாலம் சென்றதும் கால எவனன் என்னும் ஒரு வீரன் மதுரையின்மீது படை எடுத்துவந்தான். அதே சமயத்தில் ஜராஸந்தனும் படை எடுத்து வரச் சித்தமானுன். இதைக் கேட்டதும், உடனே யுத்தம் ஆரம்பித்தால் யாதவர்கள் அனைவரும் அழிந்து போவார்கள் என்றெண்ணி, ஸ்ரீ கிருஷ்ணன் நடுச் சமுத்திரத்தில் துவாரகா நகரத்தைத் நிருமித்து அதில் யாதவர்களைக் கொண்டுபோய் வைத்து, அவர்களை இரட்சிக்கும் வேலையைப் பலராமன் மீது சுமத்தி, தாம் கால எவனனுடன் போர் புரியப் புறப்பட்டான். கால எவனன் மிகவும் பலசாலியாகையால், அவனை யுக்தியினுற்ருன் கொல்லவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணன் ஓடலானுர். கால எவனன் அவரைப் பின்தொடர்ந்தான்.

---

35. முசுகுந்தன் கதை

ஸ்ரீகிருஷ்ணன் முன்னும், கால எவனன் பின்னுமாக ஓடியோடி முடிவில் ஒரு குகையை அடைந்தனர். அங்கு இருளில் ஸ்ரீ கிருஷ்ணன் மறைந்தார். அவ்விடத்தில் வேருெரு ஆடவன் படுத்திருப்பதைக் கண்டு. ஸ்ரீ கிருஷ்ணன் தான் சாது வேடம் பூண்டு படுத்திருக்கிருர் என்றெண்ணிக் கால எவனன் அவனை உதைத்தான்.

அதனல் அந்த மனிதன் கோபங்கொண்டு எழுந்து, வெறும் பார்வையினலேயே கால எவனனை எரித்து நீருக்கிவிட்டான்.

அவ்வாறு எரித்த புருஷன் இக்ஷ்வாகு வமிசத்தில் வந்த மாந்தாதா என்னும அரசனுடைய புத்திரனுகிய முசுகுந்த னுவான்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த யுத்தத்தில் தேவர்களுக்கு நன்ருக உதவிபுரிந்து விட்டுக் களைப்பாறும் பொருட்டு அவன் மேற் கூறிய குகையில் வந்து படுத்திருந்தான். தன் நித்திரையைக் கலைப்பவர்கள் தனது ஒரு பார்வையின லேயே நீருகிவிடவேண்டும் என்று தேவர் களிடமிருந்து வரம் பெற்றிருந்ததனல் கால எவனன் நாசமடைந்தான். பின்னர், கிருஷ் ணன் குகையில் தோன்றி, தான் யார் என் பதைத் தெரிவிக்க, அது முதல் முசுகுந் தன் ஸ்ரீகிருஷ்ணனுடைய பரமபக்தர்களில் ஒருவனுனன். பிறகு ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்குத் திரும்பினன்.

---

36. ருக்மணி சுயம்வரம்

ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்குத் திரும் பியது தெரிந்ததும் ஜராஸந்தன் அந்நகரத் துள் புகுந்தான். ஸ்ரீ கிருஷ்ணன் அவ னுடன் யுத்தஞ் செய்யாமல் பலராமருடன்

ஓடிப்போனர். ஜராஸந்தன் அவர்களைப் பின்தொடர்ந்தான். இராம கிருஷ்ணர்கள் பிரவர்ஷணம் என்னும் பருவதத்தின்மேல் ஏறிக்கொண்டார்கள். அப்பொழுது அவர்களை எரித்துவிடும்பொருட்டு அந்தப் பருவதத்தின் நாற்புறமும் தீ வைத்துவிட்டு, இனி அவர்கள் பிழைக்கமாட்டார்கள் என்று நினைத்து, அவ்விடத்தினின்றும் போய்விட்டான். உடனே இருவரும் மலையினின்றும்குதித்து வெளிப்போந்தனர்.

இவ்வாருக நிர்ப்பயமான பிறகு பலராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் விவாகம் நடைபெற்றது. பலராமர் இரேவத ராஜனுடைய மகளாகிய இரேவதியை மணம புரிந்தனர். கிருஷ்ணன் ருக்மணியை மணந்தான். ஆனல் அவளை அடையும் பொருட்டுப் பெருமுயற்சிகள் செய்ய வேண்டியதாயிருந்தது.

விதர்ப்ப தேசத்து அரசனுகிய பீஷ்மனுக்கு ருக்மணி என்ளெரு புதல்வி இருந்தாள். ஒரு நாள் மன்னனிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய குணத்தைப்பற்றி யாரோ வருணித்துப் பேசியதை அவள் கேட்டு, கிருஷ்ணனையே தான் கணவனுக அடையவேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டனள். அவளுடைய எண்ணம் உத்தமமானதென்று எல்லோருக்கும்

தோன்றியது. அவளுடைய சகோதரன் ருக்குமி என்பவன் கிருஷ்ணனை வெறுத்துக் கொண்டிருந்ததனால், அவன் மாத்திரம் அவள் கருத்திற்கு இசையவில்லை. அவனுக்கு ருக்மணியைச் சிசுபாலனுக்குக் கொடுத்து விவாகம் செய்யவேண்டுமென்று எண்ணமிருந்தது. அவ்வாறே செய்ய வேண்டுமென்று பிடிவாதமும் கொண்டிருந்தான். ஆகையினால் ருக்மணி ஒரு யுக்தி செய்தாள். அதாவது அவள் ஒரு அந்தணர் மூலமாய்க் கிருஷ்ணனுக்குக் கடிதம் எழுதி அனுப்பி, அதில் சகல சங்கதிகளையும் அவருக்குத் தெரிவித்ததோடு "விவாகத்தின் முதல் நாள் குலாசாரத்தின்படி நானும் சிசுபாலனும் அம்பிகையின் தரிசனத்திற்குப் போவோம். அவ்விடத்தில் தாங்கள்வந்து என்னை அழைத்துச் செல்லவேண்டும்" என்றும் எழுதியிருந்தனள். ஸ்ரீ கிருஷ்ணன் அவ்வாறே செய்தான் ருக்மணியின விவாக மகோற்சவத்தின்பொருட்டு எல்லாம் சித்தப் படுத்திய பிறகு அவளும் சிசுபாலனும் அம்பிகையின் தரிசனத்திற்குச் சென்ற சமயம் பார்த்து, கிருஷ்ணன் தந்திரமாய் வந்து ருக்மணியைக் கவர்ந்துகொண்டு போய் விட்டான். போகவே, விவாகத்திற்காக வந்திருந்த அரசர்கள் கிருஷ்ணனைப் பிடிக்க முயன்றார்கள். அதற்குள் பலராமனும் படைகளுடன் வந்துசேர்ந்தான். அவனும்

கிருஷ்ணனும் சேர்ந்து போர் புரிந்து எல்லோரையும் வென்றார்கள். பிறகு பீஷ்மராஜன் அரசர்கள் முன்னிலையில் விதிப்படி ருக்மணியைக் கிருஷ்ணனுக்குத் திருமணம் செய்துவைத்தான். ருக்மணிக்குப் பத்துப் புதல்வர்கள் பிறந்தார்கள். அவர்களுள் பிரத்தியும்னன் என்பவன் மிகுந்த பராக்கிரமசாலியாக இருந்தான். அவனே சம்பராசுரனைக் கொன்றான்.

---

37. சத்தியபாமையின் திருமணம்

ஸத்ராஜிதன் என்னும் ஓர் யாதவன் இருந்தான். அவனுக்குச் சூரியன் ஒளி பொருந்திய சியமந்தகமென்ற மணியைக் கொடுத்திருந்தான். அது தனக்கு வேண்டுமென்று கிருஷ்ணன் அவனைக் கேட்டான். அவன் கொடுக்கவில்லை. பிறகு ஒரு நாள் ஸத்ராஜிதனுடைய சகோதரனை பிரஸேனன் என்பவன் அந்த இரத்தினத்தைக் கழுத்தில் தரித்துக்கொண்டு வேட்டைக்குப் போயிருந்தபொழுது, ஒரு சிங்கம் அவனைக் கொன்று அந்த மணியை எடுத்துச் சென்றது. அச்சிங்கத்தை ஜாம்பவான் என்னும் கரடி கொன்று, இரத்தினத்தை கவர்ந்து சென்று தன் குழந்தைக்கு விளையாடக் கொடுத்தது.

நெடுநேரமாகியும் பிரஸேனன் திரும்பி வராதது கண்டு, கிருஷ்ணன் தான் அந்த மணிக்காக அவனைக் கொன்றிருப்பான் என்று ஸத்ராஜிதனுக்குத் தோன்றியது. இதை அவன் பலரிடத்திலும் சொன்னான். அப்பொழுது தன்பேரிலுள்ள இந்தப் பழியை நீக்க எண்ணங்கொண்டு கிருஷ்ணன் பிரஸேனனைத் தேடும்பொருட்டு புறப்பட்டான். போகப் போக அவனை ஒரு சிங்கம் கொன்றதென்றும், அச்சிங்கத்தை ஜாம்பவான் கொன்றானென்றும் தெரிய வந்தது ஆதலால் அவர் ஜாம்பவான் குகையினருகில் வந்து மற்றவர்களை வெளியில் இருக்கச் சொல்லி, தான் தனிமையாக உட்சென்றார். குகையில் ஒரு சிறுவன் அந்த மணியை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருப்பதைக்கண்டு அந்த இரத்தின மணியை எடுத்துக்கொள்வதற்காகக் கிருஷ்ணன் முன் சென்றான் இது ஜாம்பவானுக்குத் தெரிந்து அவன் ஓடிவர அவனுக்கும் கிருஷ்ணனுக்கும் அவ்விடத்தில் போர் நடந்தது. அதில் ஜாம்பவான் தோல்வியடைந்தான். அதனால் அவன் தன் புதல்வியாகிய ஜாம்பவதியையும் அந்த மணியையும் கிருஷ்ணனுக்குக் கொடுத்து அனுப்பினான். கிருஷ்ணன் மணியைக் கொண்டுவந்து ஸத்ராஜிதனிடம் ஒப்புவித்து, நடந்த சங்கதி யனைத்தும்

சொல்ல அப்பொழுது கிருஷ்ணன் மேல் காரணமின்றிப் பழி சுமத்தியதற்காக ஸத்ராஜிதனுக்கு வருத்த முண்டாகி, அவன் தன் புதல்வியாகிய சத்தியபாமாவைக் கிருஷ்ணனுக்கு விவாகஞ் செய்துகொடுத்ததுமல்லாமல் வரதட்சிணையாகத் தன் மணியையும் கொடுத்தான்; ஆனால் அதைக் கிருஷ்ணன் பெற்றுக்கொள்ளவில்லை.

---

38. பாணாசுரன் கதை

ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ருக்மணி, ஜாம்பவதி, சத்தியபாமா என்று மூன்று மனைவிகளிருந்த போதிலும், வேறு ஐந்து மகளிர்களையும் கல்யாணம் செய்துகொண்டார். பௌமாசுரன் என்ற ஒரு கொடிய அசுரன் நாட்டிலுள்ள பதினாறாயிரத்து நூறு கன்னிகைகளைப் பிடித்துக்கொண்டு வந்து சிறையில் அடைத்து வைத்திருந்தான். கிருஷ்ணன் அவனைக் கொன்று அவர்களை விடுவித்தார். அப்பொழுது அக் கன்னிகைகள் எல்லோரும் கிருஷ்ணனையே மணம் புரிய இச்சை கொண்டதனால் கிருஷ்ணன் அவர்களையும் விவாகம் செய்துகொண்டார். இம்மனைவியரிடத்தில் கிருஷ்ணனுக்கு மக்களுண்டாகி, அவருடைய குடும்பம் பெருகலாயிற்று. கிருஷ்ணனுடைய புத்திரன்

பிரத்யும்னன் என்பவனுக்கு ஒரு புதல்வன் இருந்தான். அவன் பெயர் அநிருத்தன். அவனுக்குப் பாணாசுரனுடைய மகள் உஷை என்பவள் வாழ்க்கைப்பட்டாள். அவர்களுடைய திருமண வரலாறு மிகவும் விநோதமானது.

பாணாசுரன் சோணிதபுரத்து அரசன். அவனுக்குத் தன் சக்தியைப்பற்றி மிகுந்த கர்வம் உண்டாயிருந்தது. தன்னுடன் போர்புரியத் தன்னைப்போன்ற வீரன் கிடைக்கவேண்டுமென்பது அவன் இச்சை. அவனுடைய அவா சீக்கிரத்தில் நிறைவேறியது

பாணாசுரனுடைய புதல்வியாகிய உஷை என்பவள் அநிருத்தனை ஒரு முறை கனவில் கண்டாள். அப்பொழுது அவனுடைய எழிலைக் கண்டு அவன்தான் தனக்குப் புருஷன் ஆகவேண்டும் என்று அவள் விரும்பினாள். ஆனால் அதற்குத் தனது தந்தை சம்மதிக்கமாட்டான் என்று நினைத்து, அவள் அதைத் தந்தையிடம் தெரிவிக்காமல், தனது தோழியும், பிரதானியினுடைய மகளுமாகிய சித்திரலேகையினிடம் சொன்னாள். சித்திரலேகை, துவாரகையில் அநிருத்தன் தன் மஞ்சத்தின் மீது நித்திரையில் ஆழ்ந்திருக்கும்பொழுது, ஏதோ யுக்திசெய்து அவனை உஷையின்

அரண்மனைக்குத் தூக்கிக்கொண்டு வந்தாள். பிறகு சற்றுநேரத்தில் அநிருத்தன் நித்திரையினின்றும் எழுந்ததும் அவனுக்கு எல்லாம் புதியதாகத் தோன்றியது. இதற்குள் உண்மை விளங்கவே அவன் அங்குச் சுகமாகக் காலங்கழிக்க நேர்ந்தது.

சின்னுட்கள் செல்லவும், இச் சங்கதி பாணுசுரனுடைய காதிற்கு எட்டியது. அப்பொழுது தன் அநுமதியின்றித் தன் மகளின் அரண்மனையில் புகும் அன்னிய புருஷனைத் தக்கபடி தண்டிக்கவேண்டுமென்று கோபத்துடன் பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டு அவன் உஷையின் பள்ளியறைக்குச் சென்றான். அநிருத்தனிடத்தில் அம்பு ஒன்றும் அச் சமயத்தில் இல்லை. அங்கு வாயிலுக்குக் குறுக்காக வைக்கும் இரும்புத் தடி ஒன்று இருந்தது. அதை எடுத்துக்கொண்டு அவன் பாணுசுரனுடன் யுத்தஞ் செய்தான். அதில் அவனுக்கு வெற்றி கிடைக்கவில்லை. பாணுசுரன் அவனைப் பிடித்துக் கட்டிப்போட்டு வைத்தான். அநிருத்தன் படுத்த விடத்தில் திடீரென்று காணுமற்போன சங்கதி துவாரகையிலிருக்கும் யாதவர்களுக்குத் தெரிந்ததும் அவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரியமுற்றார்கள். பல திசைகளிலும் தேடித் தேடி, கடைசியில் பாணுசுரன் அவனைப் பிடித்துக் கட்டிப்போட்டு வைத்

திருக்கிருனென்று தெரிந்துகொண்டனர். அப்பொழுது பலராமனும் கிருஷ்ணனும் யாதவர் படையைக்கொண்டு அவனை விடு விக்கும்பொருட்டு ஏகினர். யாதவர்களுக்கும் பாணுசுரனுக்கும் பெரிய யுத்தம் நடந்தது. அதில் பாணுசுரன் தோல்வியடைந்தான். பிறகு அவன் உஷையை அநிருத்தனுக்குக் கொடுத்து திருமண விழாவை மிக்க சிறப் புடன் நடத்தி அவர்களைத் துவாரகைக்கு அனுப்பினுன்.

---

39. ஜராஸந்தன் வதமும், அரசர்களுடைய விடுதலேயும்

ஸ்ரீகிருஷ்ணன் தன் சகோதரர், சகோ தரி, மனைவிமார், மக்கள், பேரன் முதலிய குடும்பத்தாரோடு சுகமாக வாழ்ந்து வருங் காலத்தில், மகத தேசத்து அரசனுகிய ஜராஸந்தன் சிறைப்படுத்தியிருந்த இரு பதினுயிரம் அரசர்களும், 'எங்களை இவ் விடத்தினின்றும் விடுத்தால்தான் நாங்கள் உயிர்பிழைப்போம்" என்று இரகசியமாய் அவரை வேண்டினுர்கள். அதே சமயத்தில் பாண்டவர்களில் மூத்தவரான தருமரும் தாம் செய்யப்போகும் இராஜ சூய யாகத் தைப்பற்றி யோசனை கேட்பதற்காகக் கிருஷ்ணனை அழைத்துவருமாறு தூதனை அனுப்பியிருந்தார்.

கிருஷ்ணன் இந்திரப்பிரஸ்தத்திற்குச் சென்று தருமரைக் கண்டு, 'நான் உங்களுக்கு உதவிபுரிய வருகிறேன்; கவலைப்படவேண்டாம்' என்று கூறி, சிறைப்பட்ட அரசர்களுக்கு அங்கிருந்து செய்தி சொல்லியனுப்பினார். பிறகு பீமனைத் தன்னுடன் மகததேசத்திற்கு அழைத்துச்சென்று, அவன் கையால் ஜராஸந்தனைக் கொல்வித்து அரசர்களைச் சிறையினின்றும் விடுவித்தார். திரும்பி வந்ததும் தருமராஜருடைய யாகம் ஆரம்பமாயிற்று. அச்சமயத்தில் சிசுபாலன் கிருஷ்ணனை நிந்தித்தபடியால் எவ்வாறு கொல்லப்பட்டானென்பதும், அரசுரிமைப் பங்கைப் பாண்டவர்களுக்குக் கொடுக்கும்படி செய்த முயற்சியெல்லாம் துரியோதனனுடைய அகந்தையினால் வீணானதும், பிறகு கௌரவ பாண்டவர்களுக்குள் நடந்த பெரும் போரின் வரலாறும், அதில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குப் பதினெட்டு நாள் சாரதி வேலை செய்ததும், அநேக தருணங்களில் யுக்தியினாலும் தந்திரங்களினாலும் பாண்டவர்களை இரட்சித்து, அவர்களால் பொல்லாத கௌரவர்களை நாசஞ் செய்வித்ததும், 'பால பாரதம்' என்னும் எமது நூலில் நீங்கள் விவரமாய்ப் படித்திருப்பீர்கள்.

---

40. குசேலர் சரித்திரம்

எவனை ஒருதரம் மித்திரன் என்று கருதினாரோ அவனுக்காக மிகவும் தாழ்மையான வேலையுங்கூடச் செய்ய ஸ்ரீ கிருஷ்ணன் பின்வாங்குவதில்லை. உண்மையான அன்பின் இலட்சணமும் இதுதான். பாண்டவர்களுக்காகக் கிருஷ்ணனுடைய மனது எப்படித் துடித்துக்கொண்டிருந்ததென்பதும், அவர் அவர்களுக்குத் துன்ப காலத்தில் எவ்வாறு உதவி புரிந்தாரென்பதும் பால பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணனுடைய மித்திரப் பிரேமையைப்பற்றி அற்புதமான கதையொன்றுண்டு.

ஸ்ரீ கிருஷ்ணன் இளமையில் சாந்தீபினீ என்னும் குருவினிடத்தில் வித்தை கற்றார் என்று முன்னர் கூறினோம். அப்பொழுது அங்கு அவருடன் சுதாமன் (குசேலன்) என்றோர் அந்தண வாலிபனும் வித்தியாப்பியாசம் செய்துகொண்டிருந்தான். அவன் கிருஷ்ணனுக்கு அந்தரங்க நண்பனாயிருந்தான். கல்விப்பயிற்சி முடிந்தபின் ஸ்ரீ கிருஷ்னன் மதுரைக்குச் சென்றார். சுதாமன் தன் இல்லத்திற் கேகினான். அது முதல் அநேக வருஷங்கள் வரையில் அந்த நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை.

கிருஷ்ணனுடைய கீர்த்தி நாளுக்கு நாள் வளர்ந்து நான்கு திசைகளிலும் பரவியது. அதைக் கேட்டு சுதாமர் மிகவும் ஆனந்தமடைந்தார். அவர் பெரிய வித்துவானும், சற்குணரும், தூய அந்தணருமாவார். ஆனால் அவர் மிகவும் தரித்திரராயிருந்தார். இருந்தபோதிலும், கிடைப்பதைக் கொண்டு திருப்தியாக காலங்கழித்துவந்தார். அவருடைய மனைவி சுசீலையும் அவரைப்போலவே நற்குண முள்ளவளாயிருந்தாள். வறுமையினால் அவருக்கு உடலார உடுக்கவும், வயிறார உண்ணவும் கிடைக்கவில்லையே யென்று அவள் வருத்தப்படுவாள். சுதாமரும், கிருஷ்ணனும் இளமை முதல் நண்பர்களாயிருந்து, ஒருவரை யொருவர் மிகவும் நேசித்து வந்தது அவளுக்குத் தெரியும். சுதாமர் ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசிக்கச் சென்றால், தமது தரித்திரம் நிமிஷத்தில் நீங்கும் என்பது அவளுடைய உறுதியான நம்பிக்கை. ஆதலால் அவள் தன் பதியைக் கிருஷ்ண தரிசனத்திற்குப் போகும்படி அடிக்கடி கூறிக்கொண்டிருந்தாள். நீண்ட காலம் வரையில் சுதாமர் அவள் வார்த்தையைப் பொருட்படுத்தவில்லை. திரவியத்திற்காக இல்லாவிடினும் நண்பனைத் தரிசித்துக் கண்குளிரப் பார்ப்பதற்காகவாவது அவரிடம் செல்ல வேண்டுமென்று ஒரு நாள்

அவருக்குத் தோன்றியதனால் அவர் துவாரகைக்குப் போகபுறப்பட்டார். நண்பனைக் காணப்போவதனால் அவருக்கு இஷ்டமான பொருளைக் கொண்டுபோக விரும்பினார். சுதாமருடைய வீட்டிலோ கொண்டுபோகும்படியான பொருள் ஒன்றுமே இல்லை. அப்பொழுது சுசீலை அடுத்த வீட்டிலிருந்து நான்கு பிடி அவல் வாங்கிக்கொண்டுவந்து சுதாமருடைய கந்தைத்துணி யொன்றில் கட்டிக்கொடுக்க, அதை யெடுத்துக் கொண்டு சுதாமர் புறப்பட்டுத் துவாரகைக்கு வந்துசேர்ந்தார். துவாரகையைச் சுற்றிலும் காவற்காரர்கள் காத்துக்கொண்டிருந்தனர். அவர்களிடம் அநுமதி மிகுந்த சிரமத்துடன் பெற்று சுதாமர் நகரத்தில் பிரவேசித்து, கிருஷ்ணனைத் தேடிக்கொண்டே ருக்மிணியின் மந்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அமர்ந்திருந்த இடத்தை நோக்கிச்சென்றார். அவரைப் பார்த்ததும் ஸ்ரீ கிருஷ்ணன் ஓடிவந்து, தம் தோழரை அன்புடன் ஆலிங்கனஞ்செய்து, அவருடைய காலை அலம்பி, உடம்பிற்குப் பரிமள சந்தனத்தைத் தடவினார். கந்தலை உடுத்திருக்கும் அந்தணராகிய சுதாமரை ஏன் கிருஷ்ணன் இவ்வாறு உபசரிக்கிறாரென்பது அங்கிருந்தவருக்கு விளங்கவில்லை. கிருஷ்ணனும் சுதாமரும் நெடுநேரம் வரையில் அன்புடன் உரையாடிக்கொண்டிருந்தார்கள். குருவின்

வீட்டிலிருக்கும்பொழுது பலவிதமான இடையூறுகளினின்றும் அவர்கள் எவ்வாறு தப்பினார்கள், குரு அவர்களை எவ்வாறு பிரியத்துடன் நடத்தினார், அக்காலத்தில் அவர்கள் எப்படிச் சிந்தித்தார்கள், விளையாடினார்கள், பாடங்களைப் படித்தார்கள் என்று இவ்வாறெல்லாம் நினைவுக்குக் கொணர்ந்து உரையாடி மகிழ்ந்தனர். அப்பொழுது இருவருடைய கண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் பெருகலாயிற்று. பின்னர், "எனக்காக நீ என்ன காணிக்கை கொண்டுவந்திருக்கிறாயோ அதைக் கொடு" என்று ஸ்ரீகிருஷ்ணன் கேட்டார். சுதாமர் ஒன்றுந் தோன்றாமல் விழித்தார். எத்தகைய ஐசுவரியமுள்ளவர்களையும் திகைக்கச் செய்யும் நிகரில்லா ஐசுவரியவந்தனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு, தாம் கொண்டுவந்த அற்ப அவலை எப்படிக் கொடுப்பது என்று அவர் வெட்கித் தலைகுனிந்து உட்கார்ந்திருக்கையில் ஸ்ரீகிருஷ்ணன் தாமாகவே அவரது கந்தையில் கட்டிவைத்திருந்த அவலரிசியைத் தேடி எடுத்து, அதினின்றும் ஒரு பிடி எடுத்து, மிகுந்த உவகையுடன் தின்றார். அது அவருக்கு அறுசுவையுண்டியைவிட அதிக ருசியாக இருந்தது. இஃதெல்லாம் உண்மையான அன்பின் மகிமையேயன்றி வேறென்ன ?

சுதாமர் கிருஷ்ணனோடு ஒரு நாள் தங்கிவிட்டு மறுதினம் விடைபெற்று தமது ஊருக்குப் புறப்பட்டார். ஸ்ரீ கிருஷ்ணனும் அவருடன் வெகுதூரஞ் சென்று, அடிக்கடி தமக்குத் தரிசனம் கொடுக்கச் சொல்லி வற்புறுத்தியபின் தமது அரண்மனைக்குத் திரும்பினர். சுதாமர் வந்த வழியை நோக்கிச் செல்லலானர். ஆனல் "எமக்குக் கொஞ்சம் திரவியம் கொடு" என்கிற வார்த்தை வெட்கத்தினல் அவர் வாயினின்றும் வெளி வரவில்லை. மேலும் கிருஷ்ணனும் தாமாக அவருக்கு 'எடுத்துக்கொள்' என்று சொல்ல வில்லை. இவ்வளவு ஐசுவரியவானனபோதிலும் பழைய நட்பை மறவாமல் தம்மைச் சொந்த சகோதரனைப்போல் நடத்தினர் என்று சுதாமருக்கு மிகவும் திருப்தி உண்டாயிற்று அதுமாத்திரம் அல்ல; தமக்குத் திரவியத்தைக் கொடுக்காததும் ஒரு பெரிய உபகாரம் என்று நினைத்தார்; ஏனென்ருல், பொருள் கிடைத்திருந்தால் ஒரு சமயம் தமக்குச் செருக்கு மேலிடும் என்று கருதி மகிழ்வுற்ருர்.

இவ்வாருக, மித்திரனுடைய தரிசனம் கிடைத்ததற்காக ஆனந்தமடைந்து கொண்டே சுதாமர் தமது ஊரை அணுகிய தும் தமது ஊர் முற்றிலும் மாறுதலடைந் திருப்பதாக அவருக்குப் புலப்பட்டது.

ஐந்து உப்பரிகைகளுடைய மாளிகைகளை யும், பரப்பு வாய்ந்த நந்தவனங்களையும், தம்மை எதிர்கொண்டு அழைப்பதற்காக உயர்ந்த ஆடை யாபரணங்களை அணிந்து வரும் ஆடவர் மகளிரையுங் கண்ணுற்று சுதாமர் திகைக்கலானார். உடுக்கக் கந்தையும் இல்லாத தம் மனைவி சுசீலை பீதாம்பரம் உடுத்திருந்தாள். அவரைப்பந்தல் போலிருந்த தமது வீடு இந்திரபவனம் போல் மிளிர்ந்துக்கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவருக்கு வெகுநேரம் வரை யில் அப்புதுமையின் காரணம் விளங்க வில்லை. பிறகு எல்லாம் ஸ்ரீகிருஷ்ண னுடைய திருவிளையாடல் என்று உணர்ந் தார். இத்துணை அன்பு வாய்ந்த நண்பன் ஒருவர் தமக்குக் கிடைத்ததற்காக அவ ருக்கு எவ்வளவு பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாயிருக்கும் என்பதை அளவிடவும் கூடுமோ ?

---

41. அவதார முடிவு

தீயோர்களைத் தண்டிக்கவும், நல்லோர்களைக் காக்கவும் ஸ்ரீகிருஷ்ணன் எப்போதும் முயன்றுகொண்டிருந்தார். அதனாலும் அவருடைய அன்பு மிகுதியாலும் அவர் மக்களுடைய மனதைக் கவர்ந்திருந்தார். கம்ஸன், ஜராஸந்தன் முதலியவர்களைப் போன்ற தீயோர்களைக் கொல்வதுதான் ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தின் முக்கிய இலட்சியமாயிருந்தது. அதை நிறைவேற்றியதும், தமது அவதாரத்தை முடிக்கவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணன் நினைத்தார். தேவர்களும் அவ்வாறே கருதினர்.

யாதவச் சிறுவர்களில் சிலர் பிண்டாரகம் என்னும் க்ஷேத்திரத்திற்குச் சென்றிருந்தனர். அவ்விடத்தில் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள் ஒரு வேடிக்கை செய்தனர், தம்முள் ஒருவனாகிய சாம்பன் என்பவனை ஒரு கர்ப்பிணியின் வேடத்தை அணியச் செய்து, அருகிலிருந்த ஒரு முனிவரிடம் சென்று, "இவளுக்குப் பெண்குழந்தை பிறக்குமோ, ஆண் குழந்தை பிறக்குமோ" என்று அவரைப் பரிகாசமாய்க் கேட்டனர். சிறுவர்கள் தம்முள் ஒருவரையொருவர் பரிகாசம் செய்துகொள்வதைவிட்டு முனிவரைப்போன்ற பெரியாரை இத்தகைய பரிகாசத்திற்குள்

ளாக்கியது மிகவும் தகாத செயலாய் முடிந்தது. ஆதலால் சீக்கிரத்திலேயே அதன் பயனை யாதவர்கள் அநுபவிக்க வேண்டியதாயிற்று. முனிவர் கோபத்துடன், "இவளுக்கு ஒரு உலக்கை பிறக்கும். அது உங்களையெல்லாம் நாசம்பண்ணும்" என்றனர். முனிவரின் வாக்கியம் உண்மையாயிற்று. சாம்பன் பெண் கோலத்தைக் களைந்ததும், அவனுடைய வஸ்திரத்திலிருந்து ஒரு இரும்பு உலக்கை கீழே விழுந்தது. அதைக் கண்டு சிறுவர்கள் பயந்து அவ்வுலக்கையை எடுத்துக் கொண்டு உக்கிரசேனன், வசுதேவன் முதலியவர்களிடம் சென்றனர். அவர்கள் அந்த இரும்பு உலக்கையைக் கல்லில் தேய்த்துத் தேய்த்துப் பொடியையும் மிகுந்திருந்த துண்டையும் கடலில் வீசி எறிந்துவிடும்படி சொல்ல, சிறுவர்கள் அவ்வாறே செய்தனர். ஆனால் இந்த உபாயத்தினால் வரப்போகும் துயரம் ஒன்றும் ஒழியவில்லை. கடலில் எறிந்த துண்டை ஒரு மீன் விழுங்கியது. சூர்ணம் மிதந்துகொண்டே கடலோரமாய் வந்து தங்கியது. மீன் ஒரு வலைஞனின் வலையில் அகப்பட்டது. அதை அவன் அறுத்து அதில் அகப்பட்ட இரும்புத்துண்டை ஒரு வேடனுக்குக் கொடுத்தான். வேடன் அதைத் தன் அம்பிற்கு இணைத்தான்.

இஃதிவ்வாருக, துவாரகையில் அபசகுனங்கள் காணலாயின. ஸ்ரீகிருஷ்ணன், பெண்களையும், விருத்தர்களையும் தவிர்த்து மற்றவர்களைச் சங்கோத்தாரம் என்னும் தீர்த்தத்திற்கு அனுப்பிவிட்டு, தாம் பலராமனுடன் பிரபாஸ தீர்த்தத்திற்கு சென்ருர்.

சங்கோத்தாரத்திற்குச் சென்றயாதவர்களுக்கு ஒரு நாள் மதுபானம் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. அவர்கள் ஏராளமாகக் குடித்து, குடித்த மயக்கத்தில் தமக்குள் சண்டைசெய்ய ஆரம்பித்தனர். வர் வர சண்டை மும்முரமாகி ஒருவரையொருவர் கொல்லத் தலைப்பட்டனர். அம்புகளும் வில்களும் ஒடிந்தன. அப்பொழுது யாதவ வீரர்கள் செடிகளையும் மரங்களையும் பிடுங்கி எறியலானுர்கள். அதனுல் அவர்களில் பலர் மாண்டு வீழ்ந்தனர். ஸ்ரீகிருஷ்ணனும் பலராமனும் நடுவில் சென்று சமாதானப்படுத்த முயன்ருர்களெனினும் அவர்களைப் பொருட்படுத்துபவரிலர். முடிவில் சண்டை செய்யச் செய்ய இரண்டொரு நாழிகையில் சகல யாதவர்களும் இறந்தொழிந்தனர். அதை கண்டு இனி தாம் ஜீவித்திருப்பதால் பயனில்லையென்று பலராமன் கடலில் போய்க் குதித்தார். ஸ்ரீகிருஷ்ணனும் ஒரு அரசமரத்தடியில் வலது காலின்மீது இடது